பூரண கிராமதானம்

5 - JAN 1957
MADRAS

ஆச்சாரிய வினோபா பாவே

சர்வோதயப் பிரசுராலயம்
(அகில பாரத சர்வசேவா சங்கம்)
தஞ்சாவூர்

முதற் பதிப்பு—டிசம்பர், '56—10,000

108857

விலை அணா 4

Kabeer Printing Works, Madras (3468)

பதிப்புரை

பூதானத்திலிருந்து கிராமதானம் மலர்ந்தது. இது பூதான இயக்கத்தின் சிகரமாக இன்று விளங்குகிறது. இதுவே நமது இறுதி லட்சியமாகிய கிராம சுயராஜ்யத்திற்கு வழியாகும். இது வரையிலும் ஒரிஸ்ஸாவில் 1500 கிராமங்களில் நிலம் உடைய வர்கள் எல்லோரும் தங்கள் நிலத்தை கிராம சமுதாயத்திற்கே கொடுத்துவிட்டார்கள். தமிழ் நாட்டில் 2-10-'55-ல் முதன் முதலாக வயலூர் என்ற கிராமம் கிராமதானமாகக் கிடைத்தது. வினோபாஜியின் யாத்திரையில் கோவை ஜில்லாவிலும் இப் பொழுது மதுரை ஜில்லாவிலும் சுமார் 30 கிராமங்கள் கிடைத் துள்ளன.

கிராமதானத்தின் ஆதாரக் கருத்துக்கள் இன்னும் மக்க ளிடையே பரவவில்லை. ஆகையால்தான் தமிழ் நாடு கிராம தானத்தில் முன்னேருததுபோல் தோன்றுகிறது. ஆனல் கிராமதானம் அல்லது சமுதாய கிராமம் என்பது தமிழர் பண்பு, நாகரிகம், இலக்கியம் ஆகியவற்றில் பதிந்து கிடப் பது. இதை மறந்துள்ளோம், அவ்வளவுதான். "கிராம சமு தாயம்" என்பது நமது பழஞ்சொல்.

வினோபாஜி பல இடங்களில் தமது பிரசங்கங்களில் கிராம சமுதாயத்தின் ஆதாரக் கருத்துக்களை தெளிவாக விளக்கி யுள்ளார். அவைகளிலிருந்து சிலவற்றைத் தொகுத்து இச்சிறு நூலில் கொடுத்துள்ளோம். வினோபாஜி எதிர்பார்ப்பதுபோல் தமிழ்நாட்டில் ஆயிரக் கணக்கான கிராமதானம் அல்லது சமுதாய கிராமம் கிடைக்கும் என்று நம்புகிறோம்.

1918-லேயே பாரதியார் "செல்வம்" என்ற கட்டுரையில் கிராம சமுதாயக் கருத்தை மிகவும் அழகாக விளக்கியுள்ளார். அதையும் இத்துடன் அனுபந்தமாகச் சேர்த்துள்ளோம்..

தஞ்சாவூர்
23-12-'56

சர்வோதயப் பிரசுராலயம்
(அகில பாரத சர்வசேவா சங்கம்)

பொருளடக்கம்

எண்			பக்கம்
1.	கோராபுட் வழிகாட்டுகிறது	...	1
2.	தனி உடைமை நீங்க கிராமதானம்	...	8
3.	சமூகப்புரட்சிக்கு கிராமதானம்	...	13
4.	கிராமதானத்திற்கு உகந்த தமிழ்நாடு	...	27
5.	வயலூர் கிராமதானம்	...	33
6.	கிராமதானத்தின் மகிமை	...	38
7.	தனி உடைமையின் தீமை நீங்கும்	...	43
8.	மறவாப்பாளைய கிராமதானம்	...	44
9.	யுத்த காலத்திலும் தப்பும்	...	44
10.	தமிழரின் அறிவுக்கு உகந்தது	...	46
11.	ராமராஜ்யத்திற்கு அஸ்திவாரம்	...	47
12.	ஆறுமுகனுக கிராமதான வழி	...	47
13.	அரசாங்கத்தின் பொறுப்பு குறையும்	...	48
14.	அறநெறிச் சக்தி வளரும்	...	50
15.	முதலில் கிராமதானம் ; பின்பு பஞ்சாயத்து	...	51
16.	இனி பிர்க்கா தானம், தாலூகா தானம்	...	52
17.	நகரத்தின் மீது செல்வாக்குப் பெருகும்	...	53
18.	இன்றைய நிலையிலிருந்து விமோசனம்	...	54
19.	நகரப் பிடிப்பினின்று விடுதலை	...	54
20.	சாம்ய யோகம்	...	55
21.	நிர்மாண ஊழியர்களுக்கு அழைப்பு	...	56
22.	தமிழ் மக்களுக்கு வேண்டுகோள்	...	58
	அனுபந்தம் : அஹிம்சைமுறையில் கிராமப் பொதுவுடைமை—சுப்பிரமணிய பாரதியார்	...	60

பூரண கிராமதானம்

1. கோராபுட் வழி காட்டுகிறது

தெலிங்கானுவில் தோற்றம்

பூதான யக்ஞம் தெலிங்கானுவில் ஆரம்பித்தது. அங்கு அப்பொழுது இருந்த விசேஷ காரணங்களினுல் பூதான யக்ஞம் தோன்றிற்று. விவசாயிகளும் நிலச் சுவான்தார்களும் சண்டையிட்டுக் கொண்டிருந்தார் கள். இருவருக்கும் பகைமை வளர்ந்துவந்தது. இதை அகற்றுவது முதல் வேலையாற்று. இந் நோக்குடன் ஆரம் பித்த இயக்கத்திற்கு நல்ல பலன் ஏற்பட்டது. இதன் மூலம் தேசத்திலேயே ஒரு புதிய கருத்தின் உதயத்தைக் கண்டோம். இதுதான் பூதான யக்ஞத்தின் முதற்படி.

தேசத்தின் கவனத்தை வசீகரித்தது

இதற்குப் பிறகு இரண்டாம் நிலையைக் கண்டோம். இந்த இயக்கம் நன்ருகப் பரவிய பொழுது தேசம் முழுவதிலும் இதன் எதிரொலி கேட்டது. ஆனுல் ஒரு விசேஷ நிலைமையில் தெலிங்கானுவில் தோன்றிய பூதான யக்ஞம் தேசத்தின் மற்றப் பாகங்களில் வேரூன்றி வள ருமா என்பது சந்தேகமாயிருந்தது. டில்லிக்கு நடந்து போன பொழுது இயக்கம் முன்னேறி வந்தது. இதனுல் தேசம் முழுவதின் கவனத்தையும் இயக்கம் கவர்ந்தது. இதனுல் நல்ல பிரசாரப் பலன் ஏற்பட்டது. இதை நமது இயக்கத்தின் இரண்டாம் கட்டம் எனலாம்.

ஊழியர்களிடை தன்னம்பிக்கை

மூன்ருவதாக, ஊழியர்களின் மனதில் தன்னம்பிக்கை ஏற்படுத்துவது அவசியமாயிருந்தது. இதில் என் கவனத்தைச் செலுத்தினேன். ஆதலால், உத்தரப் பிரதேசத்தில் 5 லக்ஷம் ஏகராவும் தேசமுழுவதிலும் 25 லக்ஷம் ஏகராவும் குறிக்கோளாக வைத்துக்கொண்டோம். குறித்த காலத்திற்குள் இவைகள் நிறைவேறின. இதனுல் ஊழியர்களின் மனதில் அளவற்ற தன்னம்பிக்கை ஏற்பட்டது.

பீஹாரில் தீவிர வேலை

பீஹார் மாகாணத்தின் நிலத்தில் ஆறில் ஒரு பாகம் பூதானமாகப் பெற்று நிலமில்லாத எல்லோருக்கும் நிலம் கொடுக்க வேண்டுமென்று தீவிர முயற்சி செய்ததை நமது நான்காவது படி என்று சொல்லலாம். இது சாத்தியமாகும் முறையில் பீஹாரில் தீவிர வேலை நடந்தது. ஒரு மாகாணத்தில் லக்ஷக்கணக்கானவர்கள் லக்ஷக்கணக்கான ஏக்கர் நிலத்தை பூதானமாகக் கொடுக்கக்கூடும் என்பதைப் பிரத்யக்ஷமாக பீஹாரில் கண்டோம். கிடைத்த நிலத்தின் ஏக்கர் எண்ணிக்கையைவிட மூன்று லக்ஷம் பேர் தானம் கொடுத்தார்கள் என்பதே அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. நிலதானம் அளித்தவர்களின் எண்ணிக்கைக்கே ஒரு தனி மகத்துவம் உண்டு. இந்த இயக்கத்தின் ஜீவசக்தி எங்கும் பரவக் கூடியது என்று மக்களின் மனதில் தென்பட்டது. மனப்பூர்வமாக லக்ஷக்கணக்கானவர்கள் நிலதானம் கொடுத்ததைக் கண்டேன். கடலில் அலை உயரும்பொழுது அதில் அழுக்கும்தான் சேரும். அதுபோலவே சிலர் வேறு நோக்கத்துடன் தானம் கொடுத்தார்கள் என்று சில தானபத்திரங்களைப் பற்றிக் கூறலாம். ஆனுல் இதைக்கண்டு இதுதான் உண்மை என்று நாம் கருதக்கூடாது. நல்ல எண்ணத்துடன் தானம் கொடுத்தவர்களின் எண்ணிக்கை அதிகமே.

பொதுவாய் மக்களிடம் உள்ளதைவிட அதிகமான சுயநல மின்மையை பூதானம் கொடுத்தவர்களிடையே நாம் எப்படி எதிர்பார்க்கலாம்?

ஆனால் பீஹாரில் நடந்த வேலையினால் பூதானத்தின் நீதியும் நேர்மையும் எல்லாவிடத்திலும் மக்களின் மனதில் பதிந்தது. நிலத்தில் ஆறில் ஒரு பாகம் என்ற நமது கோரிக்கை நிறைவேறவில்லை. ஆனால் அங்கு ஊழியர்கள் இன்றும் ஓய்வில்லாமல் பாடுபட்டுவருகிறார்கள். நில விநியோகமும் ஆரம்பித்துள்ளது. இதனால் நிலதானம் அதிகமாகக் கிடைப்பதற்கேற்ற சூழ்நிலையும் அமையலாம். பூமிப் பிரச்னை தீருவதற்கு இந்த வழியை எல்லோரும் அனுஷ்டிப்பார்கள். நமது வேலை பூர்த்தியாகாவிட்டாலும் எங்கு ஊழியர்கள் கூடினாலும் நில வினியோகப் பிரச்னை அவர்கள் கவனத்தைக் கவர்ந்ததே பெரிய வெற்றியாகும். இப்பொழுது, சூழ்நிலையும் மாறிவருகிறது. மாகாணம் முழுவதிலும் ஒரு புதிய உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இதைப் பயன்படுத்திக்கொண்டு சர்க்கார் தகுந்த சட்டம் இயற்றலாம். இந்த இடத்தில்தான் பூதான யக்ஞம் நான்காம் படியையும் கடந்தது.

பூர்ண கிராமதானம்

இப்பொழுது ஒரிஸ்ஸா மாகாணத்தில் ஐந்தாம் படிக்கு வந்துள்ளோம். இங்கு நடக்கும் வேலையில் புரட்சியின் ஒளிவீச ஆரம்பித்துள்ளது. இது கிராமங்களையே நெருங்கிய குடும்பங்களாக மாற்றிவிடும். இந்த அதிசய நிகழ்ச்சியை எப்படி அழைப்பதென்று பொருளாதார நிபுணர்கள் தங்கள் மூளையை அலட்டிக்கொண்டிருப்பார்கள். ஆனால் எனக்கு அத்தகைய சிரமம் ஒன்றும் இல்லை. “கிராமக் குடும்பம்” என்று இதைச் சாதாரணமாகச் சொல்லுவேன். இந்தியாவின் பண்பில் குடும்ப உணர்ச்சி வேரூன்றியுள்ளது. இதை நாம் வளர்த்து

கிராமத்தின் அளவிற்கு குடும்ப மனோபாவத்தை வளரும் படிச் செய்தால் போதுமானது. நாம் எந்த கிராம ராஜ்யம் ஏற்படுத்துவதற்காக இதுவரை சமூக சேவையெல்லாம் செய்து வந்தோமோ, அந்த கிராம ராஜ்யத்திற்கு அஸ்திவாரம் இதன்மூலம் போட்டதாகக் கருதலாம். பின்னர் மேல் கட்டடம் கட்ட ஆரம்பிக்க வேண்டும். ஆதலால் இங்கு நடக்கும் வேலையை இறுதிப்படி என்று கூறுகிறேன்.

சர்வோதய கிராம நிர்மாணம்

பட்டினியால் பரிதவிப்போருக்கு ஏதோ இதன் மூலம் சிறிது பரிஹாரம் கிடைக்கும் என்று மட்டும் நாம் கருதவில்லை. உடனே ஏதோ சிறிது பரிஹாரம் கிடைத்த போதிலும், இந்த அல்ப உதவி கொடுப்பது மட்டுமே நமது இறுதி நோக்கமல்ல. நம் லக்ஷியம் அஹிம்சா ஜனசக்தியைத் திரட்டுவதே. கிராமங்களை நெருங்கிய குடும்பங்களாக மாற்றி அமைக்காவிட்டால் இந்த ஜன சக்தியை நாம் வளர்க்க முடியாது. இதற்காகத்தான் ஒரு தக்க சாதனத்தைப் பல வருஷங்களாகத் தேடி வந்தேன். இதை எந்தவிதத்தில், எப்படி ஆரம்பிப்பது என்று அடிக்கடி சிந்தனை செய்துவந்தேன். முப்பது வருஷங்களாக கிராம சேவையில் ஈடுபட்டு இவைகளைப் பற்றி ஆழ்ந்த சிந்தனை செய்து வந்துள்ளேன். ஆத்ம சக்தியில் நான் அன்றும் இன்றும் நம்பிக்கையுடையவன். அன்று சுதந்திரம் இல்லை; இன்று சுதந்திரம் கிடைத்து விட்டதால் ஏதாவது செய்யவேண்டும் என்று எண்ணினேன். நம்மை அழுத்திவந்த அடிமை வாழ்வு அகன்று விட்டதால் மக்களின் ஜனசக்தியை உருவாக்க இது நல்ல சமயம்.

முப்பது வருஷமாக என்னுடைய கிராம சேவையென்ற அஸ்திவார வேலையின்பேரில் இப்பொழுது பூதான யக்ஞத்தின் ஐந்து தளங்கள் கட்டி முடிந்தன.

நமக்கு முழு கிராமதானம் கிடைக்கும் இடங்களில் உடனே கதர், இதர கிராமக் கைத்தொழில்கள், ஆதாரக் கல்வி போன்றவைகளைத் துவக்கலாம்.

தேசம் முழுவதிலும் உள்ள நிலத்தில் ஆறில் ஒரு பங்கு அல்லது 5 கோடி ஏக்கர் நிலம் வேண்டுமென்று கேட்டுவருகிறேன். இதன் மூலம் ஒரு பெரிய காரியம் நிறைவேறும். இருந்தாலும், இப்பொழுது கிடைப்பது போல முழு கிராமதானங்கள் கிடைத்தாலன்றி அஹிம்சா ஜனசக்தியை நாம் உருவாக்க இயலாது.

தேசத்திற்கே கோராபுட் வழிகாட்டுகிறது

முழு கிராமதானம் என்பது ஒரு தீவிர வேலைத் திட்டம். சென்ற நான்கு வருஷமாகப் பரவலான வேலைக்கு முடிந்த அளவு ஒரு உத்வேகம் கொடுத்துள்ளேன். இந்த வேலையில் பல ஸ்தாபனங்கள் ஈடுபட்டிருப்பது சந்தோஷத்தைக் கொடுக்கிறது. கடவுளின் கிருபையால் பரவலான வேலையைப் போலவே தீவிரமான வேலையான 'பூர்ண கிராமதானமும்' ஒரிஸ்ஸாவில் நடந்து வருகிறது. இந்தியாவிற்கே கோராபுட் ஒரு வழிகாட்டியாக விளங்குகிறது.

பூதானத்தில் முதல்படி தெலிங்கானு; அது ஸ்தலத்தில் இருந்த குறைகளை நீக்குவதற்காக ஏற்பட்டது. இதைப் **பரிகார** அம்சம் என்று கூறலாம். இரண்டாவதாக தேசத்தின் கவனம் முழுவதையும் இந்த நிலப் பிரச்னைக்கும் அதன் சாத்வீக பரிகாரத்திற்கும் இழுத்ததாகும். மூன்ருவது ஊழியர்களின் தன்னம்பிக்கையை எழுப்பி உறுதிப்படுத்தியது. நான்காவது, ஆறில் ஒரு பங்கு நிலதானத் திட்டத்தை எந்த அளவிற்கு நிறைவேற்ற முடியும் என்பது. இதைப் **பரவல் முறை பூதானம்** என்று கூறுகிறேன். ஐந்தாவதாக, பூர்ண கிராம தானத்தின் மூலம் கிராமங்களை குடும்பங்களாகச் செய்வது. இதற்குப் பிறகு நாம் எண்ணும் கிராம ராஜ்யம், அல்லது

ராம ராஜ்யத்தை நிர்மாணிக்கும் வேலை வருகிறது. இதைத்தான் "நிலப்புரட்சி" என்று சொல்லுகிறேன்.

ஐந்தாம் கட்டத்திற்கு நாம் வந்துவிட்டோம். வேலை செய்வதற்கு திட்டம் ஒன்றும் இல்லை என்று ஊழியர்கள் குறை கூற இடமில்லை. உண்மையான உணர்ச்சியும், சிந்தனையும் உள்ளவர்கள் சாகக்கூட நேரமில்லாத அளவிற்கு எல்லையற்ற வேலையைக் காண்பார்கள். இதனுல்தான், குஜராத்தில் எழுபது வயதான ஸ்ரீ ரவிசங்கர் மஹாராஜ் இந்தப் பணிக்கு நூறு ஆண்டுகள்வரையில் வாழ விரும்புகிருர்.

ஆதர்ச கிராம சித்திரம்

சில கிராமங்கள் ஆறில் ஒரு பாக நிலத்தைத் தானமாக அளித்தன. முழு கிராமத்தையும் கொடுக்கத் தோன்றவில்லையே என்று நான் ஆச்சரியப்படவில்லை. முழு கிராமத்தையும் கொடுத்த இடங்களில் நடக்கும் சிறந்த வேலையைப் பார்த்த பிறகுதான் தங்கள் கிராமத்தையும் முழுவதாக எடுத்துக்கொள்ளும்படி கிராம வாசிகளே நம்மை அழைப்பார்கள். ஆதலால் இப்பொழுதே ஆயிரக்கணக்கான கிராமங்களை முழு தானமாகப் பெற முயற்சி செய்யவேண்டாம். ஆனுல் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் எவ்வளவு முழு கிராமதானம் பெற முடியுமோ அவ்வளவையும் சேகரித்து அங்கே நம் முழு வேலைத் திட்டத்தையும் தொடங்குவோம். நம் திட்டம் ஆரம்பிக்கும்பொழுது எவ்வளவு முழு கிராமங்கள் தானமாகக் கிடைக்கும் என்று கூறமுடியாது. இப்பொழுது நிலம் கொடுப்பவர்கள், இயக்கத்தின் லக்ஷியம் நிறைவேறும் என்ற நம்பிக்கையில் கொடுக்கிருர்கள். இதில் ஏற்படும் பலன்களை நேரில் பார்த்து இனி மற்றவர்களும் தானம் கொடுக்க முன்வருவார்கள். அப்பொழுது முழு கிராமத்தைப்பற்றித் தனியாகப் பிரசாரம் செய்யும்

அவசியமிராது. செய்யும் வேலேயே ஒரு சிறந்த பிரசார மாகிவிடும்.

ஊழியர்களின் கடமை

ஆதலால், ஊழியர்களே புதிய கருத்தின் தூதர்களாக சுதந்திரமாகத் தாங்களே வேலே செய்யும் சக்தியை வளர்க்கவேண்டும் என்று கூறிவருகிறேன். இதுவரை இந்த இயக்கத்தின் வளர்ச்சிக்காகக் காட்டியதைவிட இனி இருக்கும் வேலேக்கு அதிகத் தியாகமும், அறிவும், சேவை யும் வேண்டும். மக்கள் தங்களிடம் உள்ள எல்லாவற்றை யும் கொடுக்கும்பொழுது, ஊழியர்களிடத்தில் அன்பும் தியாகமும் பன்மடங்கு அதிகமாகவேண்டும்.

இந்த இயக்கத்தில் ஊழியர்களுக்கு எவ்வளவு தூரம் பற்றும் இது பற்றி ஞானமும் உள்ளதென்பதற்கு இது கடுமையான சோதனையாகும். கிராம சேவையில் தங்க ளிடம் உள்ள எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்ய ஊழி யர்கள் தயாராயிருக்க வேண்டும். சுயராஜ்யத்திற்கு பல தியாகம் செய்திருக்கலாம். ஆனல் இந்த இயக்கத்திற்கு அதைவிட அதிக அளவு தியாகங்கள் செய்யவேண்டி யிருக்கும்.

கிராம ஊழியர்கள் முன்வர வேண்டும்

கிராமங்களிலிருந்தே இந்த வேலேயை எடுத்துச் செய்யப் புதிய ஊழியர்கள் முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். இதற்குமுன் நடந்த இயக்கங்களுக்கு அதிகமாக நகரங்களிலிருந்தும், மத்திய வகுப்பிலிருந் துமே ஊழியர்கள் வந்தார்கள். இந்த இயக்கத்திலும் அவர்கள் பங்கு கொள்ளுவார்கள். ஆனல் அதிகமான வர்கள் கிராமங்களிலிருந்து வருவார்கள். ஒவ்வொரு கிராமத்திலுமிருந்தே ஊழியர்கள் முன்வந்தால் அவர்கள் தங்கள் தங்கள் கிராமத்திலேயே செய்யும் புனருத்தாரண வேலே அபாரமாயிருக்கும். ஏனென்ருல் அவர்களுடைய

தியாகத்திற்கு அளவே இல்லை. மேல் வகுப்பினரும் ஏதோ தியாகம் செய்கிறுர்கள். ஆனுல் தங்களுடைய போகத்திற்காக ஒரு பாகம் வைத்துக்கொண்டுதான் பாக்கியைத் தியாகம் செய்கிறுர்கள். கிராமத்திலுள்ளவர்களோ உழைப்பும் கண்ணீரும் தவிர வேறு ஒன்றும் அறியார். ஆதலால் கிராமவாசிகளின் தியாக உணர்ச்சி தூண்டப்பட்டுவிட்டால் அவர்கள் வாழ்ந்து மடியும் பூமியில் கிருஷ்ணனின் காலத்தில் இருந்த காட்சியை மீண்டும் அனுபவிக்கலாம். பூரண கிராம தானம் கிடைத்த இடங்களில் நம் கிராமப் புனருத்தாரண திட்டத்தின்மூலம் ஒவ்வொரு கிராமமும் முன்காலத்து கோகுலத்தைப் போலவும் பிருந்தாவனம் போலவும் ஆனந்தக் களிப்படையும் என்று உறுதியாக நம்புகிறேன்.

—கோராபுட் (ஒரிஸ்ஸா) 23–7–556

2. தனி உடைமை நீங்க கிராமதானம்

நிலம், பணம் இவற்றின்மீதுள்ள தனியுடைமையைக் கலைத்து விடுவதென்பது மிகப் புரட்சிகரமானது. பலாத்காரத்திஞலும், மெஜாரிட்டி பலத்தாலும் ஏற்படுகிற வெளிப்படையான மாறுதலை இதுவரை உலகம் அனுபவித்திருக்கிறது. அந்த மாறுதலில் அடிப்படையான மன மாறுதல் இருக்கவில்லை. வெளிப்படையான மாறுதலால் மனிதன் விரும்புகிற லட்சிய சமுதாயம் உருவாக முடியாது. தனியுடைமையை ஒழிப்பது என்பது உள்ளத்தில் நிகழ்கிற கருத்து மாற்றமாகும். இந்த உலகத்திற்கே எஜமானர் கடவுள்தான் என்பதை மனிதன் உணர்ந்துவிட்டால் தனியுடைமை என்ற எண்ணம் தாஞக நீங்கிவிடும். இவ்விதம் இதயத்தில் ஏற்படுகிற புரட்சிதான் எப்பொழுதும் நீடித்திருக்கக்கூடியது. பூதான இயக்கத்தின் இறுதி லட்சியமாகிய சர்வோதய கிராமத்தின் தரிசனம் ஒரிஸ்ஸா மாகாணம் கோராபுட் ஜில்லாவில்

கிடைத்து வருகிறது. இங்கு சர்வோதய சமுதாயத்திற்கு அஸ்திவாரமிடப்பட்டு வருகிறது. இப்பொழுது சர்வோதய கிராமம் என்ற உன்னதக் கோவிலை நிர்மாணிக்க வேண்டி யிருக்கிறது.

முழுதான கிராமத்தில் ஐந்து திட்டம்

முழுவதும் தானமாகக் கிடைத்த கிராமங்களில் நிறை வேற்ற 5 திட்டங்களைக் கூறியிருக்கிறேன்: (1) நிலத் திற்கு எஜமானன் கடவுள். ஆண்டவனின் சார்பாக நிலத் திற்கு தர்மகர்த்தாவாக கிராமம் அமைந்திருக்கும். சட்டப் படி நிலம் தனிப்பட்ட மனிதனுக்குச் சொந்தமாயிராது. நிலம் கிராமத்திற்கே சொந்தமாகும். (2) ஒவ்வொரு குடும்பத்திலும் எத்தனைபேர் இருக்கிறார்கள் என்பதைக் கவனித்து சாதாரணமாக ஒவ்வொருவருக்கும் 1 ஏக்கர் வீதம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் விவசாயம் செய்வதற்கு நிலம் கொடுக்கப்படும். (3) 5 அல்லது 10 வருஷங்களுக்கு ஒரு முறை குடும்பத்திலுள்ள நபர்களின் எண்ணிக்கைக் குத் தகுந்தபடி மீண்டும் நிலப் பங்கீடு செய்யப்படும். (4) கொஞ்ச நிலம் கிராமத்தின் கூட்டுப் பண்ணைச் சாகு படிக்காக ஒதுக்கப்படும். கிராம முன்னேற்ற வேலைகளுக் காகவும் சர்க்காருக்கு வரி செலுத்துவதற்காகவும் அந்தக் கூட்டுப்பண்ணை நிலம் உபயோகிக்கப்படும். (5) சில வருஷ அனுபவத்திற்குப் பிறகு கிராமவாசிகள் விரும் பினால் நிலமனைத்தையும் கூட்டுப் பண்ணைச் சாகுபடிக்கு மாற்றிவிடலாம்.

இப்பொழுது வசதியை உத்தேசித்தே தனித்தனி விவசாயத்திற்கு நிலம் பிரிக்கப்படுகிறது. ஆனால் ஒரு வருக்கொருவர் உதவி செய்துகொள்ளுவார்கள். ஒருவரு டைய நிலத்தில் ஏதாவது பெரிய வேலை இருந்தால் கிராம வாசிகள் எல்லோரும் சேர்ந்து உதவி செய்வார்கள். ஒவ் வொருவரும் உற்பத்தியிலொரு பகுதியை கிராம நலனுக் காகக் கொடுத்துவிடுவார்கள். யாருக்காவது ஆபத்து

ஏற்பட்டால் அல்லது எவருடைய நிலத்திலாவது உற்பத்தி குறைந்துவிட்டால் கிராமப் பொதுவிலிருந்து உதவி செய்யப்படும். ஒருவருக்கொருவர் கடன் கொடுப்பதென்பது இராது. ஆனால் உதவி செய்துகொள்ளுவார்கள். ஏனெனில் கிராமம் முழுவதும் ஒரே குடும்பம்போன்றிருக்கிறது.

இதோடுகூட கிராமக் கைத்தொழில்களும் அபிவிருத்தி செய்யப்படும். கிராமம் சுயதேவைப் பூர்த்தி செய்யும் கிராமமாக மாறும். பணம் என்னும் மாயையிலிருந்து விடுபடுவதற்கு முயற்சி செய்யும்.

முதன் முதலாக துணியை வெளியிலிருந்து நமது கிராமத்திற்கு வரவழைக்க மாட்டோம் என்றும், பருத்தி விதைப்பது முதல் துணி நெய்வது வரையிலும் உள்ள எல்லா வேலைகளும் கிராமத்திலேயே செய்வோமென்றும் கிராமவாசிகள் ஒன்று சேர்ந்து முடிவுசெய்துகொள்வார்கள். லக்ஷ்மி (செல்வம்) கிராமத்திலேயே இருப்பாள். பிறகு கிராமத்திற்கு வேண்டிய இதர பொருள்களும் கிராமத்திலேயே தயாராவதற்கு ஏற்பாடு செய்யப்படும். கிராமத்தில் தனி நபருக்குச் சொந்தமான கடை எதுவும் இராது. கிராமத்தின் சார்பாக ஒரு கடை இருக்கும். இந்தக் கடையின் மூலமாக கிராமத்திற்கு வெளியிலிருந்து சாமான்கள் வாங்கலாம். மேலும் கிராமத்தின் தேவைக்கு அதிகமாக உற்பத்தியாகும் பொருள்களை வெளியே விற்கவும் செய்யலாம்.

கிராமத்தில் எல்லாச் சிறுவர்களுக்கும் ஒரேமாதிரியான கல்வி அளிக்கப்படும். எல்லோருக்கும் கல்வி கற்க வசதி ஏற்படுவதற்காக ஒரு மணி நேரப் பள்ளித் திட்டம் ஒன்றை வகுத்திருக்கிறேன். கிராமத்தில் உள்ள படித்தவன் காலையில் ஒரு மணி நேரம் குழந்தைகளுக்கும், மாலையில் ஒரு மணி நேரம் முதியவர்களுக்கும் கல்வி கற்பித்து வருவான். பிறகு பகல் முழுவதும் தன் தொழிலைச் செய்வான். நமது நாட்டுக் கல்வியில் கைத்தொழிலும்

அறிவுக் கல்வியும் இடம்பெறவேண்டும். அப்படி ஏற்படு மானல் கைகளுக்கு வேலை ஏற்படும். அறிவும் சரியான வழியில் விசாலமடையும். ஒவ்வொரு நாளும் மாலையில் கிராமவாசிகள் ஒன்று சேர்ந்து கீதை, ராமாயணம் முதலிய மத நூல்களைப் படிப்பார்கள். கிராமத்தின் முன் னேற்றத்தைப்பற்றியும் கலந்து பேசுவார்கள்.

இன்று மது குடிப்பது, பீடி, சிகரெட் குடிப்பது போன்ற கெட்ட பழக்கங்களால் கிராமத்தின் நிலைமை மிகவும் மோசமாகிக்கொண்டு வருகிறது. ஆதலால் கிராம வாசிகள் அனைவரும் ஒன்றுசேர்ந்து மது, பீடி முதலிய வற்றை விட்டுவிடுவோம் என்று கடவுளின்பேரால் உறுதி எடுத்துக் கொள்வார்கள்.

கிராமத்தின்மீது இன்று ஏற்பட்டிருக்கும் கடனைத் தள்ளிவிடுமாறு கடன் கொடுத்தவர்கள் கேட்டுக்கொள்ளப் படுவார்கள். அப்படியில்லாவிட்டாலும் குறைந்தது வட்டி யையாவது தள்ளிவிடும்படி கேட்டுக்கொள்ளப்படுவார்கள். இதன் பிறகும் கடன் தேவைப்பட்டால் கிராமத்தின் சார் பாக கடன் வாங்கப்படும்; சர்க்காரிடமிருந்தும் கடன் வாங்கப்படும்.

கிராமத்தில் எல்லா விவாகங்களும் கிராமத்தின் சார் பிலேயே கிராமத்தால் நடைபெறுமேயன்றி வீட்டில் நடை பெருது. ஆகவே விவாகத்திற்காகக் கடன்வாங்க வேண்டிய நிலையே ஏற்படாது.

சமூகத்தில் சாதி வேற்றுமை, தீண்டாமை, ஆண் பெண் வேற்றுமைபோன்ற எல்லா வேற்றுமைகளும் ஒழிக் கப்பட்டுவிடும். ஒவ்வொருவனும் கடவுளின் புத்திரனுகக் கருதப்படுவான். ஆதலால் எல்லோருக்கும் சமமான உரிமைகள் கிடைக்கும். எல்லாத் தொழில்களுக்கும் சமூகத் துறையிலும் சரி, ஒழுக்கத் துறையிலும் சரி, ஆத்மீகத் துறையிலும் சரி ஒரே மதிப்பு ஏற்படும்.

கிராமத்தில் உள்ள நிலத்தின்மீது எல்லோருக்கும் உரிமை இருக்கும். ஒவ்வொருவனும் நிலத்தில் உழைக்க

வேண்டும். ஏனென்றால் விவசாயமின்றி மனித வாழ்வு பூர்ணத்துவத்தை அடைய முடியாது. கிராமத்திலுள்ள நெசவாளி, தோல்வேலை செய்வோன், தச்சன், கொல்லன், குயவன் ஆகிய தொழிலாளிகள் தங்கள் தங்கள் தொழிலைச் செய்வார்கள். அதற்குக் கணக்கு வைத்துக்கொள்ள மாட்டார்கள். வருடமுடிவில் அறுவடை செய்தபின் ஒவ்வொரு உழவனும் ஒரு பகுதியை இவர்களுடைய வீட்டிற்கு அனுப்பிவைப்பான். முன்பு நமது கிராமங்களில் இப்படித்தான் நடைபெற்று வந்தது. இவ்விதம் 'வசுதைவ குடும்பம்' கிராமம் முழுவதும் ஒரே குடும்பமாக மாறும்.

மக்களின் சக்தியே கிராம அமைப்பிற்கு முக்கியமான ஆதாரம். கிராமவாசிகள் தங்களுடைய முன்னேற்றத்திற்குத் தாங்களே உழைக்க வேண்டும். அவர்கள் கிராமம் முழுவதையும் ஒரே குடும்பமாகச் செய்வார்களானால் அவர்களுடைய உள் வலிமை பெருகும். வெளியிலிருந்து சர்க்காருடைய உதவியும் பிறருடைய உதவியும் மிகச் சுலபமாகக் கிடைக்கும்.

இதில் இன்னும் முக்கியமான விஷயம் என்னவென்றால், ஆண்டவனும் அப்படிப்பட்ட கிராமத்தின்மீது கிருபைசெய்வார். இன்றோ ஒவ்வொருவனும் தன்னைப் பற்றி மட்டுமே யோசிக்கிறான். ஆனால் கிராமம் முழுவதும் ஒரே குடும்பமாக மாறிய பிறகு கிராமம் பூராவையும் பற்றி யோசிக்க வேண்டிவரும். யோசித்து அதன்படியே கடைப்பிடிக்கவும் நேரிடும்.

முழு கிராம தானத்தினால் கிராமங்களில் இகலோக வாழ்க்கை முறையிலும் ஒழுக்க முறையிலும் முன்னேற்றம் ஏற்படும். கிராமத்தில் உற்பத்தி பெருகும்.

பசுப் பாதுகாப்பு மூலமாக பால், நெய், அதிகமாகக் கிடைக்கும் ; கைத்தொழில்கள் பெருகும். கிராமம், செல்வம் நிறைந்ததாயிருக்கும். இவையெல்லாவற்றையும் விட முக்கியமான விஷயம் என்னவென்றால் மனித வாழ்க்கையின் கடைசி லட்சியத்தை நோக்கி எல்லோருடைய

கவனமும் செல்லும். நிலத்திற்கும் செல்வத்திற்கும் எஜமானர் கடவுளே. நாம் அனைவரும் அவருடைய மக்கள், என்ற இத் தத்துவத்தை நடைமுறையில் காண்பிப்பதற்கு கிராமவாசிகள் தான், தனது என்ற சுயநலத்தை நீக்குவதில் ஒருபடி முன்னேறியுள்ளனர். இப்பொழுது அவர்கள் அந்த விருப்பத்துடன் விசுவ ரூபமான, சமூக ரூபமான ஆண்டவனிடம் தங்களை அர்ப் பணித்துக்கொள்ள முயல்வார்கள். கைகளினால் சேவை செய்து உள்ளத்தில் எப்பொழுதும் கடவுளை தரிசனம் செய்துகொண்டு, மூளையினால் ஞானத்தைக் கொடுக்கும் கல்வியைத் தேடுவதில் ஆர்வங்கொண்டு இடைவிடாமல் அவர்கள் முன்னேறுவதற்குரிய பாதை இப்பொழுது திறந்துள்ளது.

3. சமூகப்புரட்சிக்கு கிராமதானம்

கிராமதானம் மூலம் பெரும் புரட்சி

இங்கே 200-க்கும் அதிகமான முழு கிராமங்கள் கிடைத்திருப்பது பூமிதான இயக்கத்தில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். இதிலிருந்தே பூரண கிராமதானம் தொடங்கியிருக்கிறது. பூமிதான இயக்கத்தின் கடைசி கட்டமாகும் இது. அதன் முதல் கட்டம் கிராமத்தில் நில மில்லாதவர் எவருமே இருக்கக்கூடாது என்று ஆரம்பமா யிற்று. இந்தக் கடைசி கட்டமோ கிராமத்தில் தனி மனிதர் எவருக்கும் நிலத்தில் உரிமை கூடாது என்பதை நோக்கமாய்க் கொண்டுள்ளது. நிலத்திற்கும் சரி மற்ற சொத்து சுகங்களுக்கும் சரி உரிமையாளர், அதிகாரி கடவுளே. நாம் அனைவரும் அவர் தொண்டர்கள். கடவுள் அளித்துள்ள நிலமும் பணமும் மற்ற கணக்கிலடங்காப் பொருள்களும் எல்லோருக்குமே பொதுவாய் உரியவை. நாம் ஏதேனும் ஒரு பொருளிடம் நம்முடையதென்று

உரிமை கொண்டாடுவோமாயின் நாம் நம்மையே கடவு ளென்று சொல்லிக் கொள்ளுவதாகும். ஆகையால் நாம் எஜமானனுக வி்ரும்புவதை விடுத்து தொண்டனுக வேண்டும். ஒவ்வொருவனுக்கும் தன் வயிற்றைக் கழுவு வதற்குத் தேவையான அளவு கிடைத்தாக வேண்டும். அவனுக்கு அந்த உரிமையுண்டு. ஆனுல் எவனும் தன்னை எஜமானனென்று எண்ணிக்கொள்ளக்கூடாது. அவ னுக்கு அதற்கு உரிமை கிடையாது. பூமிதான யக்ஞத் தின் இறுதி விஷயமாகும் இது. கிராம தானத்தினுல் பெரும் புரட்சி தோன்றப் போகிறது என்பதை நான் தெளிவாய் உணர்கிறேன்.

நகரவாசிகளின் கடமை

நமக்கு ஒவ்வொரு நாளும் 'பல கிராமங்கள் கிடைத் துக்கொண்டிருக்கின்றன வாகையால் நகரவாசிகளுக்கும் இதில் பெரி:ப கடமையொன்றுண்டு. நீங்கள் நகரவாசிக ளாகையால் இப்பொழுது, ஒரு பெரிய இயக்கம் நடந்து கொண்டிருப்பதால், அதிக வசதியில்லாத எளிய சகோ தரர்களும் தியாகம் செய்து வருவதால், நகரங்களில் வாழும் நாமும் அவர்களோடு சேர்ந்து நின்று தியாகம் புரியவேண்டும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

தியாகம் என்பது வேப்பங்காய் போன்றதல்ல, கரும்பைப்போல் இனியது என்பது அதை ருசித்துப் பார்த்தவர்களுக்குத் தெரியும். நான் அதை எவ்வளவோ அனுபவித்துப் பார்த்திருக்கிறேன். அதன் விளைவாக என் வாழ்க்கையில் நான் துக்கமென்பதையே கண்ட தில்லை என்பதை இங்கே யாவருமறிய வெளியிட விரும்பு கிறேன்.

உலகத்தில் எத்தனையோ வகைத் துன்பங்கள் உண் டென்று சொல்லப்படுகிறது. நானும் அவை பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனுல் உலகத்தின் தன்மை யாதென்று என்னை எவரேனும் கேட்டால் கடவுள் தம்

குழந்தைகளுக்காக இன்பத்தை உலகெங்கும் திணித்து வைத்திருக்கிறார் என்றே பதில் கூறுவேன். ஆனந்தம் ஆத்மாவின் தன்மையாகும். கடவுள் எந்தப் பிராணியை யும் இன்பமின்றி சிருஷ்டிக்கவில்லை. எந்தத் தந்தை யும் தம் குழந்தைகள் கஷ்ட ஜீவனம் நடத்துவதை விரும்பமாட்டார். ஆகையால் பேரருளாளனான எந்தக் கடவுள் நம் அனைவருக்கும் தந்தையாய், ஆண்டவனாய் இருக்கிறாரோ அவர் குழந்தைகளாகிய நம் வாழ்க்கையைத் துன்பமயமாய்ச் செய்திருப்பதாய்க் கூறுதல் கடவுளே இல்லையெனக் கூறும் நாஸ்திகப் பேச்சாகும். இந்த ஜென்மத்தில் நான் துக்கமென்பதையே அறிந்ததில்லை.

இதற்கு ஒரு யுக்தி உண்டு. அதாவது நீங்கள் எல்லோருக்கும் சேவை புரிந்துகொண்டு பிறரைக் குறித்துக் கவலைகொள்ளுவீர்களானால் எல்லோரும் உங்க ளுக்காகவும் கவலைப்படுவார்கள். இன்று கோடிக்கணக் கான மக்கள் தத் தம் நன்மைக்காகக் கவலைப்படுவதோடு தம் நலனுக்காகக் கவலைப்பட்டு ஆவன செய்தால்தான் அது கைகூடுமென்றும் நினைக்கிறார்கள். ஆனால் துளசி தாஸர் இதற்கு நேர்மாறாகக் கூறியிருக்க என் அனுபவ மும் அதை ஒத்தேதான் உள்ளது. அவர், “பிறருடைய நலத்திற்காகவே சிந்தனை செய்வோருக்கு உலகில் ஆகக்கூடாதது ஒன்றுமே யில்லை. அவர் எண்ணிய எண்ணியாங்கு எய்துகிறார்” என்கிறார். இங்கே ஒரு சிறு விஷயத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாம் சமூகத்திற்கு நம்மிஷ்டம்போல் அளிப்பதாயினும், நம் உடைமை அனைத்தையும் கொடுப்பதாயினும், நம் இரு கைகள் கொண்டமட்டும் தானே கொடுப்போம்? ஆகை யால் அது அதிகமாக வொன்றும் இருக்க முடியாதல்லவா? ஆனால் அதற்குப் பதிலாக நாம் பெறும்போது லட்சக் கணக்கான கைகள் அளிப்பதைப் பெறுவோம். தன் இரு கைகளால் கொடுப்பவன் சமூகத்தின் எண்ணிலடங் காத கைகள் கொடுக்கப் பெறுவான். ஆனால் தன் ஒரு

கையாலும் கொடுக்க மறுப்பவன் தன் ஒரு கையால் மற்றதை வெட்டிக்கொள்வோனுக்கு ஒப்பாவான்.

யுகமென்பது நம் மனம் உருவாக்குவது

கோராபுட்டில் 200க்கும் அதிகமான கிராமங்களின் மக்கள் தம் நில உரிமையைத் துறந்துவிட்டார்கள். நான் ஒரு கிராமத்தில் நிலத்தைப் பங்கீடு செய்தபொழுது ஏற்கெனவே 24 ஏக்கர் நிலம் வைத்திருந்த ஒருவருக்கு $3\frac{1}{2}$ ஏக்கர் நிலம்தான் கிடைத்தது. அவர் மிகவும் அன்போடு அந்த $3\frac{1}{2}$ ஏக்கர் நிலத்தின் தானபத்திரத்தைப் பெற்றுக்கொண்டார். அதே கிராமத்தைச் சேர்ந்த—அதற்கு முன் ஒரு குழி நிலமும் இல்லாத—ஒருவருக்குப் புதிய பங்கீட்டில் அவர் குடும்பத்தில் அதிக நபர்கள் இருந்த காரணத்தால் 5 ஏக்கர் நிலம் கிடைத்தது. இது இதே கலியுகத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி, சத்திய யுகத்தில் நடந்ததல்ல. யுகமென்பது நாமே நம் மனத்தினுல் உருவாக்குவது ; நம் விருப்பம்போல் யுகங்கள் அமைகின்றன. கொடியயுகம் எனப்படும் இந்தக் கலியுகத்திலும் காந்தியடிகளைப் போன்ற ஒரு மகான் பிறந்தார்.

நானே இந்த யுகத்தில் பிறந்தது குறித்து என்னைப் பேரதிரஷ்டசாலியென்று எண்ணிக்கொள்ளுகிறேன். நான் என் வாழ்நாளில் நூற்றுக்கணக்கான மகான்களோடு பழகும் வாய்ப்புப் பெற்றிருக்கிறேன். இந்தியாவில் இதே யுகத்தில் எண்ணிலடங்காத மகான்கள் தோன்றியிருக்கிருர்கள். உலகெங்கும் புகழ் பெற்றுள்ளவர்கள் மட்டுமே மகான்கள் என்பதல்ல ; மகான்கள் மாணிக்கங்களைப்போல் கிராமந்தோறும் மறைந்து கிடக்கிருர்கள். பூமியில் மறைந்துள்ள ரத்தினங்கள் எத்தனையோ ! அவைகளில் ஒரு சிலவே வெளியில் தோண்டி யெடுக்கப் படுகின்றன. அவற்றின் ஒளி வீசுவதையே நாம் காண்கிருேம். நிலத்தில் தமக்கிருந்த உடைமையை பாத்தியதையைத் துறந்து, புதிய பங்கீட்டில் கிடைத்த சிறி

தளவு நிலத்தை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளும் அத்தனை பேர்களும் மகான்கள் என்பது என் அபிப்பிராயம். அவர்களுடைய புண்ணியமயமான புகழைப் பாடவே நான் இப்பொழுது எங்கும் சுற்றிக் கொண்டிருப்பது.

சம்பத்து தானம்

கிராமந்தோறும் தியாகச் செயல்கள் நடந்து கொண்டிருக்கையில் நகரவாசிகளும் அதில் ஒத்துழைக்க வேண்டும். நமக்கு தியாகத்திற்கு ஒரு வாய்ப்பேற்படுகிறதென்றால் இந்த ஜன்மத்தில் அதிலும் பார்க்கப் பெரிய அதிர்ஷ்டம் வேறெதுவும் கிடைப்பதற்கில்லை. மானிட வாழ்க்கை ஒன்றிலேயே தியாகத்திற்குச் சந்தர்ப்பம் கிடைப்பதால் அது பிறவிகளனைத்தினும் உயர்ந்ததென வியந்து கூறப்பட்டிருக்கிறது. சம்பத்து தானத்தின் மூலம் நகரவாசிகளுக்கு தியாகம் புரிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொருவரும் தம் உடைமையில் ஆறில் ஒரு பகுதியைச் சமூகத்திற்காக ஆயுள் முழுமையும் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். உப்பு–புளி–காரம் சேருவதனால் உணவின் ருசி பெருகுவதைப் போல தியாகத்தினால் நாம் அனுபவிக்கும் இன்பம் பெருகுகிறது. தியாகத்தினும் பார்க்க அதிக ருசியுள்ள சாதனம் வேறில்லை. சம்பத்து தானத்தில் நாம் எவரிடமிருந்தும் பணம் வாங்குவதில்லை. ஒவ்வொரு வீட்டிலும் நம் சேமிப்பொன்று இருக்க வேண்டுமென்பதும், தானமளிப்பவர் நம் குறிப்புப்படி தம் தானப் பொருளைச் செலவிட வேண்டுமென்பதும் நம் விருப்பம்.

நகரவாசிகள் மட்டுமல்ல, கிராமத்திலுள்ளோரும் தம் நில புலங்களின் விளைவில் ஒரு பகுதியை கிராம நலனுக்காகப் பிரதி வருஷமும் அளித்துவர வேண்டுமென்பது என் விருப்பம். தற்சமயம் பல கிராமங்களில் நிலப்பங்கீடு நடைபெற்று வருவதால் நகரவாசிகள் நிலம் பெறு

வோருக்கு விதையும் உழவுமாட்டு ஜதையும் கிணறுகளும் வழங்கலாம். இந்தியன் ஒவ்வொருவனும் தன் உடைமை யின் ஒரு பகுதியைத் தன் குடும்பத்தைச் சேராத வெளி யான் ஒருவனுக்குச் சமூகத்தின் நன்மைக்கெனச் செல விடுவதாக உறுதி பூணுவாறுயின் இந்தியாவின் உருவே மாறிப்போய்விடும்.

முழுதானம் கிடைத்த கிராமத்தில் நமது வேலை

கிராமதானம் கிடைத்து வரும் கிராமங்களில் நாம் நான்கு காரியங்களைச் செய்தாக வேண்டும் : (1) கிராம தானத்தில் நிலப் பங்கீடு நடந்தேறிய பிறகு நிலம் பெற்ற விவசாயிகளுக்கு மேலும் தேவையான உதவிகளை அளித்தாக வேண்டும். (2) விவசாயத்தினுல் ஏற்படும் அரைகுறை உதவியை நிறைவாக்க வேண்டி, கிராமக் கைத்தொழில்களைத் தொடங்கியாக வேண்டும். (3) நாம் கிராமந்தோறும் கல்வி தொடங்க வேண்டும். நம் கல்வி கிராமக் கைத்தொழில்களின் அடிப்படையில் பாரமார்த்திக நோக்கம் கொண்டதாயும் அன்றாட வாழ்க்கைக்கு உதவு வதாயுமிருக்கும். ராமாயணம், பாகவதம், கீதை முத லிய நூல்களைக் கல்வியின் மூலம் நாம் கிராமங்களில் பரப்ப வேண்டும். கிராம மக்களுக்குத் தொழிற் பயிற்சி யளித்து அவர்களை நிபுணர்களாக்க வேண்டும். நாம் அளிக்க விரும்பும் கல்வி இத்தகையது. இன்று ஆதாரக் கல்வியின் பெயரால் நடந்துவரும் கேலிக் கூத்தை நான் தொடர்ந்து நடத்த விரும்பவில்லை. (4) ஒவ்வொரு கிரா மத்திலும் ஆரோக்கியத்திற்கான ஏற்பாடுகளை விரைவில் செய்தாக வேண்டும். இதெல்லாம் செய்தான பின்பும் இன்னும் செய்ய வேண்டியவை எத்தனையோ உண்டு. ஆனல் இவை நான்கும் மிகவும் முக்கியமானவை. நகர வாசிகள் இவைகளில் ஒத்துழைக்க வேண்டும்.

மக்கள் கிணறு; அரசாங்கம் வாளியே

சுயராஜ்யம் வந்தான பிறகு மக்கள் தம் சுதந்திரத்தைக் கைநழுவ விட்டிருக்கிருர்கள். இது எவ்வாறென்ருல் அவர்கள் எதற்கெடுத்தாலும் அது அரசாங்கத்தின் பொறுப்பென்று எண்ணுவதையே நான் இவ்வாறு குறிப்பிடுகிறேன். இந்த எண்ணம் முற்றிலும் தவறு. பார்க்கப்போனுல் அரசாங்கம் ஒரு வாளியைப் போன்றிருக்க, மக்களோ கிணற்றை ஒத்தவர்கள். கிணற்றிலுள்ள நீரின் ஒரு சிறு பகுதியே வாளியில் முகக்கப்படுகிறது. இதே போல மக்களின் சக்தியின் ஒரு மிக மிகச் சிறிய பகுதியே அரசாங்கத்தினிடம் இருப்பது. ஆனுல் இந்தக் காலத்தில் வாளியிலுள்ள நீரே அதிகம் என்ற ஒரு தவருன எண்ணம் பரவியிருக்கிறது. அரசாங்கத்தின் சக்தி கணக்கில் வரும் பூஜ்யத்தைப் போன்றது. மக்களின் சக்தி '1' என்ற எண்ணைப்போன்றதென்றும் ஒன்றும் பூஜ்யமும் இணைகையில் 10 என்ற எண் தோன்றுகிறதென்றும் நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். அதே போன்று மக்களின் சக்தியும் அரசாங்கத்தின் சக்தியும் சேருங்கால் மிகப் பெரிய சக்தி விளைகிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனுல் இரண்டையும் பிரித்துத் தனித் தனியே மதிப்பிடுங்கால் மக்களின் சக்திக்கு ஒன்றின் மதிப்பும் அரசாங்கத்தின் மதிப்பு சூன்யமாகவுமே இருக்கும்.

பொதுமக்களே எஜமானர்கள், அரசாங்கம் ஊழியரே

ஜனநாயகத்தில் மக்களைப் பிரித்து வைத்துவிட்டால் அரசாங்கத்திற்கு மதிப்பேது? அரசாங்கம் நீங்களாகப் பொறுக்கி நியமிக்கும் ஊழியர்களால் அமைவது. கையாலாகாதவன்தான் என் சக்தி எல்லாம் என் வேலையாட்களிடம் இருக்கிறதென்று சொல்லுவான். நிர்வாகத்தை நடத்துவதற்காகவே நாம் ஊழியர்களை நியமித்திருக்

கிறேமென்று மக்கள் உணரவேண்டும். ஆனால் அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகள், செய்யும் காரியங்கள், நாம் ஆலோசித்து முடிவு செய்ததாய், நம் ஏவலாயிருக்க வேண்டும். தற்சமயம் பொதுநல ஆட்சி என்ற பெயரால் அரசாங்க ஊழியர்களே திட்டங்களை வகுக்கிறார்கள். ஆனால் எஜமானர்களாகிய பொதுமக்கள் திட்டம் வகுப்பதும் அரசாங்க ஊழியர்கள் அதை நிறைவேற்றுவதுமாயிருக்க வேண்டும். ஒவ்வொரு கிராமவாசியும் தம் அறிவு கொண்டு கிராமநலத் திட்டங்களை அமைக்க வேண்டும். கிராமவாசி ஒருவருக்கு நோய்கண்டதென்றால் நீங்கள் உடனே அரசாங்கத்தின் சுகாதார மந்திரிக்கா தந்தியடிப்பீர்கள்? கிராம ஆரோக்கியத்திற்கான திட்டங்கள் கிராமங்களிலேயே உருவாக்கப்பட்டு, பிறகு அரசாங்கத்தினிடமிருந்து அவற்றை நிறைவேற்றுவதற்குத் தேவையான உதவியைக் கோரிப் பெறவேண்டும்.

கல்விமுறை மக்களுடைய கையில் இருக்கவேண்டும்

சர்வோதயத்தின் அடிப்படைக் கருத்து பெரும்பாலான வேலைகள் பொதுமக்களின் சக்திகொண்டே செய்யப்படவேண்டுமென்பது. மக்களின் சக்திகொண்டு சுளுவாய் வேலையை முடிக்க முடியாத பொழுது அரசாங்கத்தின் உதவியை ஓரளவு பெறலாம். ஆனால் தற்காலத்திலோ பொதுநல ஆட்சி என்ற பெயரால் கல்வி அளிக்கும் பொறுப்பு முழுவதும் அரசாங்கத்தினிடமே இருந்து வருகிறது. இதன் விளைவாக பாஸிஸ்ட் ஆட்சி நடைபெறும் நாடுகளில் பள்ளிப் பிள்ளைகளுக்கு பாஸிஸம் பற்றிய போதனையே அளிக்கப்பட, கம்யூனிஸ்ட் ஆட்சியுள்ள நாடுகளில் பொதுவுடைமைத் தத்துவமே போதிக்கப்படுகிறது. இன்று அமெரிக்க நாட்டிலோ சின்னஞ் சிறு குழந்தைகளுக்கும் அணுகுண்டும் ஹைடிரஜன் குண்டும், விஷ்ணு பகவானின் கைகளிலுள்ள சுதர்சன சக்கரமும்

கதையும் போன்றவை என்று போதிக்கப்படுகிறது பக்தன் பகவானை நோக்கி, "பகவானே! உன் கையில் சக்கரமும் கதையும் இருக்கையில் எங்களுக்குப் பயமேது, எங்களைக் காக்கும் பொறுப்பு உம்முடையதல்லவா?" என்று கூறி வழிபடுவதைப்போல அமெரிக்கச் சிறுவர் களுக்குத் தம் நாட்டினிடம் இந்தப் புதிய அணு ஆயுதங் கள் இருப்பதால் தமக்கு ஒரு ஆபத்துமில்லை என்று போதிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் இந்தத் தவறான கருத்து ஊசியின்மூலம் மருந்து ஏற்றப்படு வதைப்போல் அறிவில் புகுத்தப்பட அவ்விடத்திய அர சாங்கம் தன் அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொண் டிருக்கிறது. இதனாலேயே, நம் நாட்டின் கல்வி சுதந்திர மாய் இருக்க வேண்டும்; கல்வியளிக்கும் பொறுப்பு மக் கள் வசமிருக்க வேண்டும்; அரசாங்கத்திற்கு அதைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் கூடாது. அரசாங்கம் கல் விக்கு உதவவேண்டுமேயன்றி அதை வரையறுக்கவோ கட்டுப்படுத்தவோ அதற்கு அதிகாரமிருக்கக் கூடா தென்று நாம் சொல்லுகிறோம்.

நீதி இலாகா சுதந்திரமாய் இருக்கவேண்டும்; அர சாங்கத்தின் ஆணைக்குட்பட்டு அது இயங்கக் கூடா தென்று கருதப்படுவதைப்போல கல்விக்கான ஏற்பாடு களும் மக்களின் சக்தியின் மூலம் நடைபெற வேண்டும். பழையகால முறையில் இதையே சொல்லுவதென்றால், கல்வி பிராம்மணர்களின் கையில் இருக்க வேண்டும்; க்ஷத்திரியர்களுக்கு அதன்மீது அதிகாரமெதுவும் இருக்கக் கூடாதென்று சொல்வேன். நம் நாட்டில் பண்டைக் காலத்தில் இருந்தது இதுவே. நான் ஜாதி வித்தியாசங் களை ஒப்புகிறவனில்லையாகையால் நான் இங்கே சொல் வது ஜாதி வேற்றுமைகளைக் கருத்தில் கொண்டல்ல. நான் வர்ணங்களைமட்டும் ஏற்பவன். இதனாலேயே பழைய முறையில் பேசுவதாக முன்கூட்டியே சொன் னேன். அந்த முறைப்படி அரசாங்கத்தை க்ஷத்திரிய

ரென்றும் கல்வி இலாகாவை பிராம்மணரென்றும் சொல்வது வழக்கம். அந்தக் காலத்தில் எந்த அரசனுவது ஒரு ஆசிரமத்திற்குச் சென்று இங்கே இம்மாதிரியான போதனையே அளிக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடத் துணிந்திருப்பானு?

அரசனையும் எதிர்த்த ஆசிரம மாணவன்

அரசன் ஆசிரமத்திற்கு ஞானம் பெறவே போவான். ஆனுல் அவனுக்கு ஆசிரமத்தின்மீது அதிகாரமெதுவும் இருந்ததில்லை. துஷ்யந்த மகாராஜனைப்பற்றிய கதையொன்று உண்டு. அவர் மிகவும் செல்வாக்குள்ளவர்; மக்களுக்கு அவரிடம் உயிர். அவர் ஒரு சமயம் வேட்டையாடச் சென்றுர். அக்காலத்தில் அரசர்கள் மான்களை வேட்டையாடுவது வழக்கம். மான்கள் ஏராளமாய்ப் பெருகிப்போய் அவைகளினுல் விளைபுலங்களுக்குச் சேதம் ஏற்பட்டு வந்ததே இதற்குக் காரணம். ஆகையால் அரசர்கள் மான் வேட்டையைத் தம் கடமை என்று கருதி வந்தார்கள். துஷ்யந்தன் வேட்டையாடிக் கொண்டே கண்வ முனிவரின் ஆசிரமத்தை அணுகினுன். அங்கே இருந்த மான்களைக் கொல்லும் பொருட்டு அவன் தன் வில்லை வளைத்தான். இதற்குள் ஆசிரமத்தைச் சேர்ந்த ஒரு சிறு பையன், "இது ஆசிரம மான். ஆகையால் கொல்லற்க" என்று கூவுகிருன். இந்திய நாட்டின் பண்பாடாகும் இது. இந்தப் பண்பாடு ஆசிரமத்தைச் சேர்ந்த ஒரு சிறு பையனுக்கும் அரசனெதிரில்போய் அவனைத் தடுப்பதற்கு வேண்டிய தைரியத்தை அளிக்கிறது. இதே நிலைமையை நாம் மீண்டும் நாட்டில் கொணர விரும்புவதால் கல்வி மக்களின் கையில் இருக்க வேண்டுமென்று சொல்லுகிறேன்.

எந்த அளவுக்குக் காரியங்களெல்லாம் கைமாறி அரசாங்கத்திடமிருந்து மக்களின் கைக்கு வருமோ அந்த அளவுக்கு அஹிம்சை செழிக்கும், அரசாங்கத்தின் அதி

காரங்கள் சிறிது சிறிதாய்க் குன்றி இறுதியில் அற்றே போய்விடும். இதனுலேயே நான் இதில் முனைந்து நிற்கிறேன்.

அரசாங்கத்தினுல் உள்ளத்தைக் கவரமுடியாது

சிலர் இதை அரசாங்கத்தின் மூலம் செய்யலாமே என்று என்னிடம் சொல்லுவதுண்டு. நான் அவர்களுக்கு, " நீங்கள் அரசாங்கத்தின் மூலம் செய்வதானுல் தாராளமாய்ச் செய்யுங்களேன். உங்களை யார் தடுக்கிருர்கள்?" என்று பதில் சொல்லுகிறேன். மேலும் நான் இன்னெரு விஷயமும் கேட்க வேண்டும் : " கடந்த எட்டு வருஷங்களில் நீங்கள் எவ்வளவு நிலம் வினியோகித்திருக்கிறீர்கள்?" அரசாங்கம் நிலம் வினியோகித்த ஒரு சில இடங்களில் அவை பிறகு ஏலம் விடப்பட்டதை நான் பார்த்திருக்கிறேன். நான் இதைக் குறை கூறும் நோக்குடன் குறிப்பிடவில்லை. அரசாங்கமே வர வர எங்களுக்கு அனுகூலமாகி வருகிறது என்று எனக்குத் தெரியும். ஆனுல் சில காரியங்களை அரசாங்கத்தினுல் செய்யவே முடியாது. சட்டத்தைக் கொண்டு நிலத்தைப் பறித்து வினியோகம் செய்யலாமாயினும் நிலத்தின் சொந்தக்காரர்களின் சம்மதம் நமக்குக் கிடைக்காது, அவர்கள் மனம் புண்படவே செய்யும் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். கிருஷ்ண பகவானிடத்தில் இருந்த சிறப்பு அவர் உள்ளங்கவர் கள்வனுயிருந்ததே. அவர் மக்களின் உள்ளங்களைப் பறிப்பதில் ஈடும் எடுப்புமில்லாதவர். அரசாங்கத்தினுல் வேறு எதைக் கவர முடிந்தபோதிலும் உள்ளத்தைக் கவர முடியாது. ஆகையால் பூமிதானம் அல்லது சர்வோதய தத்துவம்பற்றிய பணி பிரத்யேகமான பணியாகும். அரசாங்கத்தின் உதவியை நாம் நிச்சயமாகப் பயன்படுத்துவோம். அரசாங்கம் உதவியளிக்காவிடில் அதன் மடமைதான் நிரூ

பணமாகுமென்று நான் ஏற்கெனவே சொல்லியிருக் கிறேன்.

நாம் பூஜ்யத்தின் உதவியைப் பெற விரும்பியபோதி லும் அதை அதற்குரிய இடத்தில் வைக்கவே விரும்பு கிறோம். பொது மக்களின் சக்தியும் அரசாங்கமும் இணைந்து இயங்குங்கால் பெரிய சக்தியொன்று தோன் றும். ஆகையால் பூமிதானப் பணியை அரசாங்கம் செய் யக்கூடுமென்று நீங்கள் என்னிடம் சொல்லாதீர்கள். இவ்வாறு போய்க்கொண்டிருந்தால் நாளைக்கு உங்கள் குழந்தைகளைப் பராமரிக்கும் வேலையையும், அதற்கு வேண்டியவைகளை கவனிப்பதையும் அரசாங்கமே செய்யு மென்று சொல்லத் தொடங்கிவிடுவீர்கள். இந்தக் காலத் தில் மக்கள் சுய சக்தியை முற்றிலும் இழந்துவிட்டிருப்ப தால் எடுத்ததற்கெல்லாம் சட்டம் வேண்டுமென்று சொல்லுகிறார்கள். விவாக வயதை நிர்ணயிக்கவேண்டுமா, தீண்டப்படாத சகோதரர்களிடம் அன்பு செலுத்த வேண் டுமா, அரசாங்கத்தினிடம் 'சட்டம் இயற்றும்படி சொல்லு கிறார்கள். இவ்வாறு ஒவ்வொரு விஷயத்திலும் தம்மால் இது ஆகாது, அது ஆகாது என்று எண்ணிக்கொண்டு அரசாங்கமே இவைகளைச் செய்யவேண்டுமென்று சொல்லு கிறார்கள். இவைகளை யெல்லாம் கருதியே சுயராஜ்யம் வந்தபிறகு நம் மக்கள் தம் சுதந்திரத்தைப் பெரிதும் இழந்துவிட்டார்கள் என்கிறேன்.

எதற்கும் அரசாங்கத்தை எதிர்பார்ப்பது அடிமைத்தனம்

ஆங்கிலேயர் ஆட்சி இருந்துவந்த காலத்தில் பீஹா ரில் பூகம்பம் ஏற்படவே இந்தியா முழுவதிலிருந்தும் உதவிக்கு மக்கள் ஓடினார்களேயன்றி அரசாங்கத்தின் கையைப் பார்த்துக்கொண் டிருக்கவில்லை. ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் குஜராத்தில் வெள்ளப் பெருக்கு ஏற் பட்டபொழுது மக்கள் நான் முந்தி நீ முந்தி யென்று

10885 7

உதவிக்கு ஓடிவரவே அரசாங்கமும் வெட்கிப்போய் உதவி செய்ய வேண்டியதாயிற்று. ஆனல் சுதந்திரமாய் வாழும் இந்தக் காலத்தில் நான் கண்ட காட்சி என்ன? சென்ற வருஷத்தில் இதே மாரிக் காலத்தில் நான் வெள்ளப் பெருக் கெடுத்திருந்த பீஹாரின் பகுதிகளில் சுற்றிக்கொண்டிருந் தேன். பீஹாரின் சரித்திரத்திலேயே அவ்வளவு பெரிய வெள்ளம் என்றும் வந்ததே இல்லையாம். அந்தப் பிரதேசத் தில் மழை கொட்டிக்கொண் டிருந்தபொழுது சுற்றும் வாய்ப்பு எனக் கேற்பட்டது. நான் அங்கே நாற்புறமும் வெள்ளக்காடாய் இருப்பினும் சீதாமடி நகரத்து மக்கள் இரவில் சினிமா பார்க்கப் போய்க்கொண் டிருப்பதைக் கண்டேன். எனவே நான் அங்கே பேசியபொழுது "ஏ பொறுப்பற்ற ஜனங்களே, சிறிது காலத்திற்குச் சினிமாவுக்குப் போவதை நிறுத்தி அதனல் எஞ்சும் பணத்தை வெள்ளத்தினல் வீடு வாயில்களை இழந்து தவிக்கும் மக்களுக்கு உதவலாம் என்றுகூட உங்களுக்குத் தோன்றவில்லையா?" என்று கேட்டேன். ஆனல் கிராமங் களுக்கு உதவி புரியவேண்டிய பொறுப்பு அரசாங்கத்தி னுடையது என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருந்தார் கள். இதையே அடிமைத்தனம், பிறரை அண்டியிருப்பது என்று நான் சொல்லுகிறேன். ஆங்கிலேயர் ஆட்சி நடந்த காலத்தில் நாம் ஏதோ அடிமைகளாயிருந்தோ மென்றும், இப்பொழுது நம்மவரே ஆட்சி புரிவதால் நாம் சுதந்திரர் ஆகிவிட்டோமென்றும் எண்ணிக் கொள்ளா தீர்கள்.

ஆன்மீக பலத்தை எழுப்புவதே என் நோக்கம்

ஒரு நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் ஒவ்வொரு குழந்தையும் தன் கடமையை உணர்ந்து தன் மதிப்பைத் தெரிந்து அச்சமின்றி கடமையை ஆற்றுவானயின் அந் நாட்டை சுதந்திர நாடு என்று கொள்ளலாம். ஒரு நாட் டின் ஒவ்வொரு சிறு குழந்தையும் தன்னைத் தன் நாட்டின்

மன்னுகக் கொள்ளுமானல் அந்த நாடு சுதந்திர நாடே. அரசாங்கம் என்பது யாது? நாமாகப் பார்த்து ஐந்து வருஷத்திற்கென அதை அமைத்திருக்கிறோம். அதிலுள்ள வர்கள் நன்கு பணி ஆற்றுவார்களானல் அவர்களேயே மறுமுறையும் வேலைக்கு அமர்த்திக்கொள்வோம். இல்லை யேல் வேறு ஆட்களைப் பார்ப்போம். முன்பு ஆங்கிலேய ரும் முகலாயரும் மராத்தியரும் அரசாண்டதைப்போல் இப்பொழுது காங்கிரஸ் ஆளுகிறதென்று எண்ணக் கூடாது. இந்த ராஜ்யம் எம்முடையது என்ற உணர்ச் சியை எழுப்ப வேண்டுமென்று விரும்புகிறேன். இதனு லேயே நிலமும் சம்பத்தும் மக்கள் மூலமாக வினியோகிக் கப்பட வேண்டுமென்று விரும்புகிறேன். நான் அவ்வாறு விரும்புவதற்குக் காரணம், அதன் மூலம் மக்களுக்குத் தம் சக்தியை உணர முடியும் என்பது. ஆன்மாவில் அளவிலடங்காத, எல்லையற்ற சக்தி பொதிந்திருக்கிறது. ஒரு திறன் வாய்ந்த ஆன்மா உலகில் தோன்றியவுடன் அது அகில உலகையும் ஆட்கொண்டுவிடுகிறது. இந்த சிருஷ்டி யனைத்தும் ஜடம், உயிரற்றது, நான் சேதனன், உயிருள்ளவன். நான் அதற்கு சாட்சியாய் இருப்பவன். அதை உருவாக்குவோன் நானே. குயவன் தன் கை மண்ணை ஒரு கருவியாய்க் கருதி தன்னிஷ்டம்போல் அதற்கு உருவளிப்பதைப் போல சிருஷ்டிக்கு உருவளிப் பவர் நாமே. இம்மாதிரியான ஆன்ம சிரத்தையும் ஆன்ம பலமும் ஆன்மாவில் உறுதியும் நம் அனைவருக்கும் உண் டாகுமாறு செய்வதே என் நோக்கம்.

கிராமந்தோறும் மக்கள் ஒருங்குகூடி கிராம ஆட்சி யைத் தாமே நடத்தியும் கிராம நிலங்களைப் பங்கீடு செய்தும் தம் கிராமத்தில் வெளியிலிருந்து எந்தப் பொருள்கள் வரலாம் எவை வரக்கூடாது என்பதைத் தீர்மானித்து அதன்படி நடந்தும் வரவேண்டும் என்பது என் விருப்பம். இவ்வாறு ஒவ்வொரு கிராமமும் ஒரு கோட்டையாயிருக்க வேண்டும். நாம் இவை அனைத்தை

யும் செய்தாக வேண்டியிருக்கிறது. கிராம தானத்தின் மூலம் இந்த வேலையே தொடங்கப்பட்டிருக்கிறது. இவ் வேலை முன்னேறி வருவதால் இதற்கு உதவும்படி நான் நகரவாசிகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

4. கிராம தானத்திற்கு உகந்த தமிழ்நாடு

தெலுங்கானாவில் பூதான உதயம்

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் இயக்கம் தெலுங்கானாவில் தோன்றியது என்பதை அறிவீர்கள். இயக்கம் ஆரம்பிக்க வேண்டுமென்ற எண்ணமோ, சங்கல்பமோ அதற்கு முன்னால் இதயத்தில் தோன்றவேயில்லை. தெலிங்கானாவில் ஏற்பட்ட நிலையில், அச்சூழ்நிலையில் பூமிதான இயக்கம் இயற்கையாகவே தோன்றியது. ஒரு கிராமத்திலுள்ள நிலமில்லாத மக்களுக்கு 80 ஏக்கர் வேண்டுமென்று கேட்டேன். ஒருவர் முன்வந்து 100 ஏக்கர் தானம் தந்தார். இச்சம்பவம் எனக்குச் சிறிய விஷயமாகத் தோன்றவில்லை. அப்படிப்பட்ட எண்ணம் உதித்திருப்பின் அன்றே விஷயம் முடிந்திருக்கும். இந்தியாவில் மட்டுமல்லாது, ஆசியா முழுமையும் நிலப்பிரசினை இருக்கவே செய்கின்றது. மற்றைய நாட்டினர் தங்கள் தங்கள் வழிகளில் இப்பிரசினைக்குத் தீர்வு காண்கிறார்கள். ஆனால் அவர்கள் சென்ற முறையும், துறையும் பாரதத்திற்கு ஏற்ற வழியுமல்ல, தகுதியுடையதுமல்ல. எனவே தானம் என்ற முறை ஏற்பட்டிராவிட்டால் நமது நாட்டிற்குத் தகுந்த வழியில் நிலப்பிரசினை தீர்ந்திராது; தவறான வழியில் அடியெடுத்துவைத்து அவதிப்பட்டிருப்போம். அஹிம்சையின் சக்தியை உணர்ந்தே இக்காரியத்தை மேற்கொண்டிருக்கிறோம். அதனால்தான் இயக்கம் உருவாகிய அன்றைக்கே இந்தியாவில் குறைந்தது 5 கோடி ஏக்கர் தானம் பெறாமல் பிரசினை தீராது என்ற எண்ணம்

எழுந்தது. நிலத்தைக் கேட்பது என்பதும், 5 கோடி ஏக்கர் பெறுவதென்பதும் என்னைப் போன்ற பாமர மனிதனுக்குக் கடினம்தான். ஏதோ ஒரு சில ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பெற்று சிலரைத் திருப்தி அடையச் செய்திருக்கலாம். ஆனால் அஹிம்சையின் சக்தி வெளிப்பட்டிராது.

இந்தியாவிற்கு சுதந்திரம்கூட அஹிம்சா சக்தியின் பலத்தினால் கிடைத்தது. காந்தியடிகள் அஹிம்சா வழியை விரும்பியதால் மக்களும் இவ்வழியையே விரும்பினார்கள். காந்திஜியைப் பின்பற்றி ஏதாவது செய்யலாம் என்ற முடிவுக்கு வேறு வழி தோன்றாத காரணத்தினால் வந்தார்கள். அஹிம்சை சக்தி மக்களின் இதயத்தில் ஆழமாகப் பதியவில்லை. அப்படி ஏற்பட்டிருக்குமானால் சுதந்திரம் பெற்றதற்குப் பின்னால் இந்து முஸ்லிம் கலவரம் ஏற்பட்டிராது. எத்தனையோ ஆயிரக்கணக்கான மக்கள் கொலை செய்யப்பட்டிருக்க மாட்டார்கள். ஆயிரமாயிரம் மாதர்கள் அவதிக்குள்ளாகி இருக்கமாட்டார்கள். ஏறத்தாழ 50 லட்சம் மக்கள் அகதிகளாக இங்கிருந்து அங்கும் அங்கிருந்து இங்கும் அலைந்திருக்க மாட்டார்கள். இச்சம்பவங்கள் மிகப் பயங்கரமான சம்பவங்களாகத் தோன்றுகின்றன. அஹிம்சையில் நம்பிக்கையிருந்தால் இப்படிப்பட்ட சோக நிகழ்ச்சிகள் நடைபெற்றிராது. அதனால்தான் காந்தியடிகள் ஒரு முறை "மக்கள் கடைப்பிடித்த அஹிம்சை வேறு வழியில்லாமல் ஏற்றுக்கொள்ளப்பட்ட அஹிம்சை" என்று கூறினார். ஆகையால் சுதந்திரத்திற்குப் பின்னால் அஹிம்சா சக்தியில் மக்களுக்குப் பக்தி பாவனை ஏற்படவேண்டும்.

இப்பொழுது ஒரிஸ்ஸாவில் ஆயிரத்திற்கு மேற்பட்ட கிராமங்களில் வாழும் மக்கள் உடைமையை விட்டுவிட்டார்கள். சர்வசேவா சங்கமும், தாலிமீ சங்கமும், கஸ்தூரிபா சங்கமும் மற்றும் பல நிர்மாண ஸ்தாபனங்களும் சேர்ந்து கிராம ராஜ்யத்தை உருவாக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

தற்போது தமிழகத்தில் அடுத்த அடி வைக்க விரும்பு கிறேன். நீங்கள் எல்லோரும் ஒத்துழைத்தால் அந்தக் காரியம் பூர்த்தியடைந்து முன்னால் செல்வேன். அந்தக் காரியம் என்பது பூமிதான இயக்கப் பணியோடு கிராமக் கைத்தொழிலை வளர்ப்பதும், ஆதாரக் கல்வியும், ஜாதி வித்தியாசத்தைப் போக்குதலின் அவசியத்தை வற்புறுத் துவதும், கதர் திட்டத்தை ஏற்று கதர்ப் பிரசாரம் செய் வதும் தான். தமிழ்நாட்டில் முன்னரே கதர் வேலை நடந்து வந்தது. இப்பொழுது கிராமோதயக் காரியமும், ஆதாரக் கல்வியும் நடைபெற்று வருகின்றன. ஆனாலும் அதன் எல்லைகளுக்கு இன்னும் போகவில்லை. தமிழ் நாட்டில் கிராம தானத்திற்கு நல்ல சூழ்நிலை இருக் கிறது. உண்மையான கிராம பாவனையை ஒவ்வொரு கிராமத்திலும் பார்க்கிறேன்.

சிறிய கிராமமாயிருந்தாலும் பெரிய கோவிலைப் பார்க்கிறேன். இங்கே கிராமத்திலிருக்கின்ற சிறிய கோவில் வட இந்தியாவிலிருக்கும் பெரிய கோவிலுக்குச் சமமாகும். எப்படிப்பட்ட கோவிலைக் கட்டினாலும் பக்தி ஏற்படுவது ஒரே மாதிரியாகவே இருக்கும். இவ்வளவு கோவில்களை ஏன் கட்டினார்கள்? எந்தப் பாவனையோடு கோவில் ஏற்பட்டதோ அந்தப் பாவனை இங்கு இல்லாமற் போய்விட்டது. நம்முடைய வாழ்வு முறை எப்படி அமைய வேண்டும் என்பதைக் கோவில்கள் உணர்த்து கின்றன. மாணவர்கள் முன்னர் கோவில்களில் இரவு நேரங்களில் உறங்கி காலையில் எழுந்து கல்வி பெற்றார்கள். அதனால்தான் 'ஸ்கூல்' என்ற சொல்லுக்கு பள்ளிக் கூடம் என்று தமிழில் சொல்லுகிறார்கள். வேறு மொழி களில் இவ்வளவு சிறந்த பொருள் இருப்பதாகத் தெரிய வில்லை.

நாம் இருக்கின்ற எல்லா உடைமைகளையும் இறைவ னிடம் அர்ப்பணித்து அவனது பிரசாதத்தைச் சாப்பிட வேண்டுமே யல்லாது உடைமை என்று அதிலிருந்து சாப்

பிடக்கூடாது. "பூமிதான இயக்கத்தைப்பற்றிப் பேசுகின்றீர்களே தவிர கதரைப்பற்றிப் பேசவில்லையே; காந்தியடிகள் கதரைத் தீவிரமாகப் பரப்பினரே" என்று கூறுகிருர்கள். கதரைப்பற்றி பிரசாரம் செய்ய பாபாவுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டாம். ஒரு விவசாயி கிணறு தோண்ட ஆரம்பித்தானும். அப்பொழுது ஒருவன் விவசாய வேலையை விட்டுவிட்டு கிணறு தோண்டும் வேலையைச் செய்கிருயா என்று கேட்டானும். அந்தக் கதையைப் போலவே இவர்கள் கேள்வி கேட்பதும் இருக்கின்றது. கிணறு வெட்டினுல்தானே வயல் வளமாக இருக்கும். காடு, கழனியாகும். இன்று உலகத்திலிருக்கின்ற நேரடிப் பிரச்னைகளைத் தீர்க்காவிட்டால் கதர்ப் பிரசாரம் எவ்வளவு நாள் செய்தாலும் காரியம் நடைபெருது. காந்தியடிகள் கதரை சுதந்திரத்தோடு இணைத்ததால்தான் கதருக்கு மதிப்பு ஏற்பட்டது. மில் துணி அணிபவர்களையும் தாயக விடுதலைக்குத் தகுதியுடையவர்கள் என்று அன்று காந்தியடிகள் கருதியிருப்பாராஞல் ஒருவரும் கதரை அணிய முன் வந்திருக்கமாட்டார்கள். அதைப்போல நிலப் பிரச்னையோடு கதரை இணைத்தால் தான் கதர் வேலையும் நன்கு நடைபெற முடியும். கிராமத்தில் கதர் உற்பத்தியாகும்பொழுது வெளித் துணிகளுக்கு அவசியமின்றிப் போய்விடும். 20 வருடங்களாக கதர் வேலை செய்துகொண்டு வருகிரும். ஆனல் எங்கு கதர் உற்பத்தியாகின்றதோ அங்கேயே அது உபயோகிக்கப் படுவதில்லை. ஆகையால் நிலப் பிரச்னை முக்கியமான பிரச்னையாக நம் முன் நிற்கிறது. மக்கள் இப்பொழுது இப்பிரச்னையைத் தீர்க்கவே விரும்புகிருர்கள்.

கிராமத்தின் சங்கல்ப சக்தி

எல்லா நிலங்களும் கிராம உடைமையாகும்பொழுது ஒரு பாவனை ஏற்படுகிறது. அப்பொழுது மக்கள் சங்கல்பம் செய்துகொள்வார்கள். கோராபுட் கிராமதான

மக்கள் கிராமராஜ்யத்தை உருவாக்க சங்கல்பம் செய்து கொண்டுவிட்டார்கள். பசு மாட்டு மாமிசம் மலிவு என்ருலும் இந்துக்கள் கையால்கூடத் தொடமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் பசு மாதா வென்று கூறி அப்புலால் உண்பதில்லையென்று சங்கல்பம் செய்துகொண்டுள்ளார்கள். சங்கல்பம் செய்யும்போது எல்லோரது சக்தியும் ஒன்று சேருகிறது என்பதற்கு ஓர் உதாரணத்தையே கூறினேன். அதைப்போலவே கிராம மக்கள் சங்கல்பம் செய்துகொள்வார்களேயாளுல் வெளித் துணி மலிவாக இருந்தாலும் வாங்கமாட்டார்கள். எனவே சமூக ரீதியில் கதர் அபிவிருத்தி செய்ய வேண்டுமாளுல் இரண்டே வழிகள்தான் இருக்கின்றன. ஒன்று, சர்க்கார் மில்களை மூடி கதர் வேலையை எடுத்துக்கொள்ள வேண்டும். மற்ருென்று கிராம மக்கள் ஆலைத் துணிகள் அணிவதில்லையென சங்கல்பம் செய்துகொள்ள வேண்டும். பாபா கதர் வேலையை விட்டுவிட வில்லை. பூமிதான இயக்கத்தின் அடிப்படையில் கதரை நிலைத்து நிற்க முயற்சிக்கிறேன். ஆகையால் நம்முடைய எல்லா சக்திகளும் ஒரு மையப் புள்ளிக்கு வந்தாக வேண்டும். வங்காளத்தில் ஒரு ஆசிரமத்தில் இரண்டு நாட்கள் தங்கியிருந்தபொழுது பக்கத்து கிராமம் ஒன்றுக்குச் சென்றேன். அந்த கிராம நிலங்கள் அடுத்த கிராமத்தில் வாழ்கின்ற ஒருவருக்குச் சொந்தமாக இருந்தன. ஆசிரமத்தில் இருக்கிறவர்கள் ஏன் அவர்களிடம் சென்று நிலம் கேட்கக்கூடாது என்று கேட்டேன். ஆசிரமத்தில் அதிக வேலை இருக்கிறது என்று சொன்ஞர்கள். அவர்கள் சோம்பலாக இல்லையென்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆஞல் காந்தியடிகள் திரும்பத் திரும்ப எடுத்துக்கூறிய சமக்கிர புத்தி இல்லை என்று கூறுகிறேன். ஆகையால் எவ்வளவு நிர்மாண ஸ்தாபனங்கள் இருந்தாலும் அவைகள் எல்லாம் பூமி பிரசினையின் அடிப்படையில்தான் காரியமாற்ற வேண்டும். காந்தியடிகளுக்கு நிச்சயமாக பூமிதான இயக்கத்தின்மீது

பூர்ணமான திருப்தி ஏற்படுமென்பதில் சந்தேகமில்லை. ஆகையால் காந்தீயத்தில், அஹிம்சையில் நம்பிக்கை உள்ளவர்கள் அனைவரும் பூமிதான இயக்கத்தில் பங்கு கொண்டு பணியாற்ற வேண்டும். எல்லா நிர்மாணத் திட்டங்களையும் இணைத்து பூமிதான இயக்கம் நடைபெற வேண்டும்.

பூமிதான இயக்கம் பாபாவின் பணியல்ல; உங்களுடைய பணியில் உதவி செய்யவே பாபா வந்திருக்கிறார். நான் உங்களுக்கு ஒரு பூர்த்தி செய்யப்படாத செக் கொடுக்கிறேன். எத்தனை நாட்கள் பாபாவை பயன்படுத்த விரும்புகிறீர்களோ அத்தனை நாட்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள். பாரதத்தின் தெற்கு எல்லையிலிருந்து வடக்கு நோக்கித் திரும்புவதற்குள் இயக்கத்தின் கடைசிக் காரியம் வரை நடந்தாக வேண்டும். இங்கே பரிபூரண வேலை நடைபெற்ற பின்னர்தான் வடக்கு திசை நோக்கித் திரும்புவேன். தார்மீகர்கள் கங்கை நீரைக் கொண்டு வந்து ராமேசுவரத்தில் அபிஷேகம் செய்வார்கள். பின்னர் அங்கிருந்து தீர்த்தம் எடுத்துக் கொண்டுபோய் காசி விஸ்வநாதருக்கு அபிஷேகம் செய்தால்தான் யாத்திரை பூர்த்தியடைந்ததாகக் கருதுவார்கள். தமிழகத்தில் சமக்கிர ராமராஜ்யத்தை ஏற்படுத்த விரும்புகிறேன். ஆகையால் எல்லோருடைய முழு சக்தியும் கிடைத்தாக வேண்டும். எல்லோரும் ஒன்றுபட்டு தங்கள் தங்கள் பங்கைப் பகிர்ந்துகொண்டு பணி செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஜில்லாவின் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

வயலூர் கிராமதானம்

வயலூரில் கிராமராஜ்யம் உதயமாகிவிட்டது. சகோதரர் ராமகிருஷ்ண ரெட்டியார் தன்னுடைய அதிகப்பட்ச நிலங்களை நிலமில்லாதவர்களுக்குக் கொடுத்துவிட்டார். செங்கற்பட்டு ஜில்லா யாத்திரை முடிந்தவுடனே "ஏன்

நீங்கள் ஜீவன்தானம் செய்யக்கூடாது? பக்கத்து கிராமங்களுக்குச் சென்று பூமிதான, கிராமதானக் கருத்துக்களை எடுத்துச் சொன்னால் எவ்வளவு நன்றாக இருக்கும்?'' என்று அவர்களிடம் கேட்டேன். அவர் ஜீவன்தானமே தந்துவிட்டார். ஆகையால் என் சம்பந்தப்பட்டவரையில் பூமிதான இயக்கக் காரியமும் பூர்த்தியாகிக்கொண்டு வருகிறது என்று உணருகிறேன். இப்பொழுது மற்ற நிர்மாணத் திட்டங்களையும் எடுத்துக்கொண்டிருக்கிறேன். இங்கே வந்திருக்கின்ற சகோதரர்கள் இயக்கப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசாங்கத்தின் ஆதரவும் இயக்கத்திற்கு இருக்கிறது. அரசாங்கத்தின் மனம் இப்போது மாறிக்கொண்டு வருகிறது. சமுதாய நலத்திட்ட அதிகாரிகளும் உதவி தருவது கண்டு மகிழ்கின்றேன்.

5. வயலூர் கிராமதானம்

தமிழ்நாட்டின் முதல் கிராமதான கிராமத்திற்கு வந்திருக்கிறேன். இங்கு வசிக்கும் மக்கள் அன்புடன் வாழக் கற்று, பிறருக்கு அன்புடன் வாழக் கற்றுக்கொடுப்பார்கள். அக்கம் பக்கத்து கிராமங்கள் இனி இக்கிராமத்தின் வளர்ச்சியைப் பார்த்து பின்பற்ற ஆரம்பிக்கும். இந்த கிராமத்து மக்கள் எதையும் இழந்துவிட்டார்களா அல்லது அடைந்துவிட்டார்களாவென்று கவனித்துக் கொண்டிருப்பார்கள். இந்த கிராமத்து மக்கள் ஆனந்தமடைந்து, வாழ்வில் உயரும்பொழுது மற்ற மக்களின் மனமும் மாறிவிடும். செல்வம் அதிகரித்தால் மட்டும் பெருமை ஏற்படாது. அன்பையும், ஒழுக்கத்தையும், சீலத்தையும் பொருத்தே நம் பெருமை வளரும். அதோடு லட்சுமியும் விருத்தியடைய வேண்டும். லட்சுமி விஷ்ணுவுக்கு தாசியாக இருந்தால்தான் பெருமையுண்டு. விஷ்ணுவிடமிருந்து பிரிந்த லட்சுமிக்கு என்றைக்கும் பெருமை ஏற்படுவது கிடையாது; அவருக்கு மக்கள் தனி மதிப்புக்

கொடுக்கமாட்டார்கள். தருமம் என்பது பரமாத்மா; செல்வம் பரமாத்மாவின் காலடியில் இருக்க வேண்டும்.

இந்த கிராமத்தில் ஒருவர் மற்றொருவருடன் சேர்ந்து ஒத்துழைக்கின்றார்கள், சண்டையின்றிச் சமாதானமாக வாழ்கின்றார்கள் என்றால்தான் இதன் புகழ் நான்கு பக்கங்களிலும் பரவும். ஒருவருக்கு ஆபத்து என்றால் எல்லோரும் உதவ ஓட வேண்டும். பாரதியார் " தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம் " என்று சொல்லியிருக்கின்றார். ஒரு மனிதர் வருத்தப்பட்டுக் கொண்டிருப்பதை மற்றவர்கள் பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது. இந்த கிராமம் எல்லா வழிகளிலும் முன்னேற வேண்டும். நேற்று பூமிதான இயக்கம் அன்பு முறையில் இயங்கி செயல்படும் இயக்கம் என்று சொன்னேன். கருத்தைஅன்பு முறையில் எடுத்துச் சொன்னால்தான் அது பரவ முடியும். இந்த ஊரில் உதயமாகியுள்ள அறிவின் கதிர்கள் எவ்லாத் திசைகளிலும் பரவட்டும்; முதலில் அடியெடுத்துவைத்து முன்னேறு பவருக்குத் தான் தைரியம் வேண்டும். அங்ஙனம் ஒருவர் அடியெடுத்து வைத்து முன்னேக்கி நடை போட ஆரம்பித்துவிட்டால் மற்றவர்கள் பின்பற்ற ஆரம்பித்துவிடுவார்கள். தமிழ் நாட்டில் கிராமதானம் கிடைப்பது கடினம் என்று எண்ணுகிறார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சகோதரர் ஜெகந்நாதன் அவர்களுக்கு " தமிழ்நாட்டில் கிராமதானம் கிடைப்பது எளிது " என்று எழுதியிருக்கிறேன். ஏனெனில் நான் படித்த தமிழ் இலக்கியங்களில் " ஒப்புரவு, அன்பு " என்ற கருத்துக்களே இடம் பெற்றிருக்கின்றன. ஒப்புரவு அன்பின் அடிப்படையிலேயே தமிழ் இலக்கியங்கள் எழுதப்பட்டிருக்கின்றன என்றுகூடச் சொல்லலாம்.

கிராமதானத்தின் லட்சியம்

உங்கள் கிராமத்தைப்பற்றி ஓரளவு தெரிந்துகொண்டேன். ஆசிரமத்தில் வாழ்ந்தபொழுது பல ஆண்டுகள் நாளுக உழைத்து அதை சுயதேவைப்பூர்த்தியுடையதாகச் செய்ய முயற்சி செய்தேன். என்னுடன் பல வாலிபர்கள் நாள் முழுவதும் உழைத்து ஒத்துழைத்தார்கள். நன்ருக உழைத்து பரிசுத்தமான வாழ்வு நடத்த முயற்சி செய்தோம். ஆசிரமத்தில் எவ்வளவு வேலேகள் நடைபெற்றனவோ அதைவிட அதிகமாக கிராமத்தில் நடைபெற முடியும். ஏனெனில் கிராமத்தில் நூறு, இருநூறு பேர்கள் வாழ்கிருர்கள் ; ஆசிரமத்தில் உணர்ச்சி பெற்ற ஒரு சிலர் தான் இருந்தார்கள் ; அதற்கும் மதிப்பு உண்டு. ஆனுல் கிராமத்தில் வாழ்க்கை மாறுதல் என்ற முறையில் நல்ல காரியங்கள் பல நடைபெற முடியும். நான் மேற்கொண்டு யாத்திரை செய்யாவிட்டால் இந்த கிராமத்திலேயே பேசாமல் தங்கிவிடுவேன். ஆனுல் இன்றைக்கு யாத்திரை செய்வது தான் எனது தருமம் என்று எண்ணுகிறேன் ; இன்றைய தேவை என்று நம்புகிறேன். சாஸ்திரக்காரர்கள் நான் யாத்திரை செய்யவேண்டும் என்று தான் சொல்லுகிருர்கள். இப்பேர்ப்பட்ட இடத்தில் ஊழியர்கள் இருக்கக்கூடும். ஆனுல் அவர்கள் இந்த கிராமத்தாராக இருக்கவேண்டுமே தவிர வெளியிலிருந்து வரக்கூடாது. உண்மையில் இந்த கிராம மக்கள் அனேவரும் ஊழியர்கள் தான். கிராமதானம் செய்த பின்னர் இந்த கிராமத்தில் தனியுடைமை இனி ஏற்படக்கூடாது. ஜாதி வர்க்க பேதங்கள் தலேகாட்டக்கூடாது. முழு கிராமமும், எல்லா மக்களும் ஒரே குடும்பம் என்ற உணர்வு பெற வேண்டும். வசதிகள் ஏற்பட வேண்டும் என்பதற்காக இப்பொழுது நிலங்கள் 5 பண்ணேகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஐந்து ஆறு குடும்பங்கள் ஒன்று சேர்ந்து ஒவ்வொரு பண்ணேயிலும் வேலே செய்கிருர்கள். இதனே நல்ல பரிசோதனே என்றே எண்ணுகிறேன். இதனுல்

கிராம நிலங்கள் ஐந்து உடைமையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனவென்று தவருக அர்த்தம் கொள்ளக்கூடாது. ஐந்து பண்ணைகளாக இன்று வசதிக்காகப் பிரிக்கப்பட்டிருந்தாலும் கிராமம் முழுமையும் ஒரே பண்ணை என்பதை அறிந்துகொள்ளுங்கள். ஒரு பண்ணையில் குறைவாக உற்பத்தியானுல் அதிகமாக விளைந்த பண்ணையிலிருந்து உதவி கிடைக்கும். கணக்கிற்காக இன்று கடன் தனித்தனிப் பண்ணைமீது இருந்தாலும் எல்லாவற்றையும் கிராமக் கடனுகவே கருதுகிருேம். கடைசியில் அரசாங்கமும்கூட இக்கிராமத்தை ஒரே குடும்பமாக ஏற்றுக்கொள்ளும். அரசாங்கத்திற்குரிய வரியை கிராமம் செலுத்தும்.

கிராமத்தில் கல்வி முறை

ஒரு புதிய ஏற்பாட்டை ஏற்றுக்கொண்டு விட்டோம். ஆதலால் அதன் புதிய கருத்தினைப் புரிந்து நிலைநாட்ட முயற்சி செய்ய வேண்டும். இந்த கிராமப் பள்ளிக்கூடத்தில் ஒரு மணி நேரப் படிப்புத்தான் சொல்லித்தர வேண்டும். அடுத்த ஊரில் 5 மணி நேரம் கற்றுக்கொடுக்கிருர்களே என்று கவலைப்படக்கூடாது. நம்முடைய பள்ளியில் 2, 3 வருடப் படிப்பு என்ற கால வரையறையும் இருக்கக் கூடாது. காலையில் நடைபெறும் பள்ளியில் 18 வயதுவரை யுள்ளவர்கள் பயில வேண்டும். மாலைப் பள்ளிக்கூடத்திற்கு மாணவர்கள் மட்டுமல்ல, எல்லா கிராமப் பெரியோர்களும் வர முயற்சி செய்ய வேண்டும். மாலை வகுப்பில் நாம் எந்த அறிவைப் புகட்டுகிருேமோ அந்த அறிவு கதையின் மூலமாக, வேடிக்கையின் மூலமாக, பண்டை, தற்கால பெரியோர்களின் வரலாறுகளை விளக்குவதன் மூலமாக, சரித்திரங்களின் மூலமாக, பஜனைகளின் மூலமாகப் புகட்டப்பட வேண்டும். பக்தியை ஏற்படுத்துவதே மாலைப் பள்ளியின் முக்கிய நோக்கமாக அமைய வேண்டும். மாடுகளை வைத்துக்கொண்டு வேலை

செய்வதைவிட இயன்றளவு கையினுலேயே விவசாயம் செய்வது சிறந்தது என்று சிபார்சு செய்கிறேன்.

விவசாயமும் கைத்தொழிலும்

ஜப்பானில் கையினுல் விவசாயம் செய்வதால் இந்தியாவில் விளைவதைவிட நான்கு ஐந்து மடங்கு அதிகம் விளைகின்றது. அதனுல் உடல்வளமும் ஏற்படும். விதை விதைத்தல், நாற்று நடுதல் போன்ற விவசாய வேலைகளையும் நன்கு செய்ய முடியும்; அதனுல் அதிக விளைச்சல் கிடைக்கும். கிராமத்தில் பசு பரிபாலனம் நடை பெற வேண்டும். அத்துடன் காளை மாடுகளையும் வளர்க்க வேண்டும். இனி நாம் காளை மாடுகளை விற்க வேண்டுமே யல்லாது வெளியிலிருந்து வாங்கக்கூடாது. இம்மாடு களின் சாணம் நல்ல உரமாகும். எல்லோரும்நூற்க வேண்டும். பெண்களின் சேலைகள் தங்கள் கையி னுலேயே நூற்கப்பட்ட நூலினுல் நெய்யப்பட்டதாக இருக்க வேண்டும். என்னுடையது, உன்னுடையது என்ற வேற்றுமை அகலவேண்டும்.

"ஆண்டவனின் ஆக்ஞை"

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தனியுடமை இல்லா கிராம உடைமையாக்கும் கிராமதானம் என்ருல் நம்பமாட்டார்கள். ஆனுல் இன்று எல்லோரும் ஒப்புக் கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு வரவேற்கத்தக்க நிலையில் காரியம் நடைபெற்றிருக்கிறது. நான் இத் தகைய சூழ்நிலைக்கும், ஏற்பாட்டிற்கும் உணர்ச்சி கொடுக்க வேண்டிவரும் என்று கனவில்கூட நினைத்த தில்லை. ஆசிரமத்தில் தொண்டு செய்வதிலேயே திருப்தி அடைந்தேன். இது ஈசுவரனுடைய திட்டம்; அவ னுடைய பிரேரணை; அவனது கட்டளை. பலர் வாழ் நாளில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளைக் கொண்டு வாழ்க்கைச் சரித்திரம் எழுதுகிருர்கள்- ஆனுல் எதிர்

காலத்தில் என்ன நடக்கும் என்று அவர்களால் எழுத முடிவதில்லை. அதைப்போலவே கிராமதானத்தைப்பற்றி முன்கூட்டி நான் சிந்தித்ததே கிடையாது. நான் திட்ட மிட்டுச் செய்திருந்தால், "நான்" செய்தேன் என்ற அகங்காரம் ஏற்பட்டிருக்கும்; ஆனால் ஆண்டவனல்லவா கட்டளை யிட்டிருக்கிறான்? எனக்கு உணர்ச்சியைக் கொடுத்து செயலில் ஈடுபடத் தூண்டிய இறைவன் உங்க ளுக்கும் கொடுப்பதற்குரிய உணர்ச்சியைக் கொடுப்பான். ஐந்து வருடமாக யாத்திரை செய்தும் சிறிதும் களைப்பே இல்லை. மனதிற்குப் பரம ஆனந்தம் ஏற்பட்டிருக்கிறது. அன்பினால் ஆத்மாவிற்குச் சாந்தி கிடைக்கிறது. இந்த கிராமத்து மக்களும் பரம ஆனந்தம் அடையவேண்டும். ஈசுவரனுக்காக எல்லாவற்றையும் அர்ப்பணிக்கும்பொழுது தான் ஆனந்தம் ஏற்படுகின்றது. எல்லாவற்றையும் விட்டு விட்டு ஒரு நாள் இவ்வுலகத்தை விட்டுப் போகிற வர்கள் தானே? (மழை பெய்ய ஆரம்பித்தது) இப்பொழுது பகவான் தன்னுடைய மழைத் துளிகளினால் உங்களை ஆசீர்வதிக்கிறார்.

(17–5–56)

6. கிராமதானத்தின் மகிமை

இன்று உங்கள் கிராமத்து மக்களிடம் பேசிக்கொண் டிருந்தபொழுது கிராம உடைமையில் 1/6 பாகம் தானம் தரத் திட்டமிட்டு வேலை செய்து வருவதாகத் தெரிவித் தார்கள். இச் செய்தி எனக்கு உண்மையில் மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. அங்ஙனம் தரப்படுகின்ற நிலம் உங்கள் கிராமத்தில் வாழும் நிலமில்லாத சகோதரர் களுக்குக் கொடுக்கப்படும் என்பதனையும் அறிந்திருப் பீர்கள். இதனால் கிராமத்தில் அன்பு பாவனையும், ஒற்றுமை பாவனையும் வளர்ந்தோங்கும். நீங்கள் கிராம தானமாகவே தரச் சிந்தித்து வருவது கிராமதானப்

பாதை திறந்துவிட்டது என்பதனையே காட்டுகின்றது. உங்கள் ஊருக்கு அருகில் தமிழ் நாட்டில் முதல்முதலாக உருவாகிய கிராமதானம் (வயலூர்) உங்கள் உள்ளங்களில் உணர்ச்சியைத் தூண்டிவிட்டிருக்கிறது.

ஒரிஸ்ஸாவில் பெருவாரியான அளவிலும், பீகார் போன்ற மாகாணங்களிலும் இன்றுவரை ஆயிரத்திற்கு மேற்பட்ட கிராமதானங்கள் கிடைத்திருக்கின்றன. கிராம தான வழி திறக்கப்பட்டதுடன் இப்பொழுது பாதையும் செப்பம் செய்யப்பட்டு வருகின்றது. இருப்பினும் நீங்கள் நன்கு ஆலோசித்துச் செய்யுங்கள்.

கிராமதானமென்ருல் ஊரிலுள்ள மக்களுக்கு ஒரே இடத்தில் சமைத்துப் போடுவது என்பதல்ல . ஒவ்வொரு குடும்பமும் தங்கள் தங்கள் வீட்டில் சமைத்தாலும், ஒரு வீட்டில் குறைவு ஏற்பட்டதென்ருல் நிறைவு செய்யவேண் டியது கிராமத்தின் பொறுப்பாகும். இனி தனித்தனியாக கடன் வாங்க மாட்டார்கள். இதுவரை தனிப்பட்டோர் வாங்கிய கடன் கிராமக் கடனுகிவிடும். ஒரு குடும்பத்தில் தந்தையும், தாயும் தங்கள் குழந்தைக்கு மணம் நிச்சயம் செய்வார்கள். ஆனுல் மணவிழாவை கிராமம் சிறப்பாக நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும். பெரிய கிராமம் கிராமதானமானுல் பகுதி பகுதியாகப் பிரித்து வேலை செய்வோம். எவ்வளவுக் கெவ்வளவு கிராமங்கள் சிறிய வையாய் இருக்கின்றனவோ அவ்வளவுக்கு பரஸ்பர உணர்வை ஏற்படுத்துவது எளிது.

கிராமமே திருமணங்களை நடத்தும்

இன்றைய நிலை என்னவென்று சிந்தித்துப் பாருங் கள். ஒவ்வொரு குடும்பமும் கவலையில் ஆழ்ந்துள்ளது. ஆனுல் கிராமதானமாக உருவெடுத்தால் அத்தகைய கவலைகள் எல்லாம் பறந்து போய்விடும். இன்று ஏழைக் குடும்பத்திலுள்ள குழந்தைகள் எவ்வளவு இன்னல்கள் அடைகிருர்கள்? ஆனுல் அதே நேரத்தில் எத்தனை வீடு

களில் இன்பமாக இருக்கிறுர்கள்? கிராமதானமான கிராமங்களில் இத்தகைய நிலைமை இராது. எல்லாக் குழந்தைகளுக்கும் உணவும், உடையும், ஆதாரக் கல்வியும் கிடைக்கும். திருமணம் நடைபெறுவது மிகவும் அன்பான காரியம். ஆனால் அந்தக் காரியத்தைக்கூட ஒருவருக்கொருவர் பரஸ்பரம் புரிந்துகொண்டு செய்வதுதான் நலமுள்ளதாக இருக்கும். அதனைப்போல கிராமதானம் என்பதனையும் நன்கு தெரிந்துகொண்டு, எல்லோரது பூரண சம்மதம் பெற்றபின்னர்தான் செய்யவேண்டும். கிராமதானம் என்பது பெரிய, அழகிய கருத்து. இந்தக் கருத்தைக் கருத்துடன் புரிந்துகொள்ளாவிட்டால் நமது செயல் சுமையாக அமைந்துவிடும். திருமணம்கூட ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ளவில்லையென்றுல் சுமையாகி விடுவதைப் பார்த்திருக்கிறேம்.

வெண்ணெயைப் பங்கிட்ட கண்ணன்

பலர் பாபா கிராமத்திற்கு வந்தால் பயப்படுவதாகச் சொன்னுர்கள். பாபாவின் அருகில் சென்றுல் "எங்கே நிலதானம் கேட்பாரோ" என்று பயந்துகொண்டு வராமல் இருக்கிறுர்கள். பாபாவைப் பார்த்துப் பயப்பட வேண்டிய அவசியமில்லை. பலாத்காரமாக நிலத்தைப் பிரிக்கும் சூரர்கள் இங்கே இல்லை. மக்கள் பூமிதான இயக்கத்தைப் பார்த்து பயப்பட்டால் இயக்கத்தைவிட்டு விட்டு பாபா பாகவதக் கதையையாவது சொல்லலாம். பாகவதம் சொன்னுல் தட்சிணை கொடுக்க வேண்டுமென்று தயங்குகிறீர்களா? பயப்படாதீர்கள் : பாபா பணத்தைக் கையால் தொடவேமாட்டார். பாகவதத்தில் பகவான் கிருஷ்ணன் வெண்ணெய் திருடி உண்ட கதையும், வெண்ணெயை விற்க விடாமல் கிராமக் குழந்தைகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்த வரலாறும் தானே இருக்கிறது. கிருஷ்ணன் ஒரு சீமானையும் தனியாக வெண்ணெய் தின்ன விடவில்லையே! பாகவதத்தைப் படித்தால் பகவான் திருடிய

கதையைத்தானே கூற முடியும்? பூமிதான இயக்கம்தான் பயமில்லாத இயக்கம். நீங்கள் எல்லோரும் பகவானைப் போல திருட ஆரம்பித்தால் என்னவாகும்? உங்கள் வீட்டிலிருக்கின்ற பசுமாட்டைப் போல பாபா பரம சாது. உங்கள் பசுமாட்டிற்கு இருப்பதைப்போல பாபாவிற்கு கொம்புகூட இல்லை; பசுவைப்போல உதைக்கவும் மாட்டார்; நீங்கள் 1/6 பாகம் கொடுத்தாலும் திருப்திப் படுவார்; பூரண கிராமதானம் தந்தாலும் திருப்தி யுறுவார். பசு புல் கொடுக்கிற மக்களிடம் அன்பு காட்டுவது போல பாபா உங்களைப் பார்த்து உள்ளம் மகிழ்வார்.

கூட்டுறவு யோகம்

உங்கள் கஷ்டத்தைப் போக்கும் யுக்தியைக் கூறவே வந்துள்ளேன். இந்தியாவில் உள்ள 5 லட்சம் கிராமங்களுக்கும் பாபா செல்ல வேண்டியிருப்பதால் திரும்பவும் உங்கள் கிராமத்திற்கு வருவது என்பது துர்லபம். காகா சாகேப் ஒரு முறை யோகத்தில் சிறந்தது **கூட்டுறவு யோகம்** என்று கூறினர். கூட்டுறவு என்ருல் பலாத்காரமாகக்கூட பலரை ஒன்று சேர்த்துவிடலாம். கூட்டுறவைவிட வள்ளுவர் கூறுகின்ற ஒப்புரவையே சிறந்தது என்று கூறுகின்றேன். எல்லோரும் ஒப்புக்கொண்டு ஒன்று சேர்வதையே ஒப்புரவு என்று குறள் கூறுகின்றது. ஆகையால் எல்லோரும் அன்பாக ஒன்று சேர வேண்டும். ஒரு மனிதன் உலகில் அன்பைத்தான் சம்பாதித்துக் கொள்ள வேண்டும். மனிதன் தேடுகின்ற செல்வமனைத்தும் இறந்த பின்னர் அவனுடனு செல்கின்றது? யாராவது நல்ல மனிதர் ஒருவர் இறந்து விட்டால், இறந்தவருக்காக மக்கள் வருந்தி நல்ல குணங்களை நாட்டு மக்கள் பாராட்டி, அவருக்கு நன்மதிப்புக் கொடுப்பார்கள். அந்த பாராட்டுதலையும், அன்பு கலந்த மொழிகளையும், மக்களின் ஆதரவையும்தான் நாம் சம்பாதித்துக்கொள்ள வேண்டும். ஒரு மனிதன் உலகில் உண்மையாக இறந்ததற்குப் பின்னர்

புகழைத்தான், பிறரது போற்றுதலைத்தான் விட்டுச் செல்ல வேண்டும். கஜினி முகம்மது இந்தியாவில் 18 முறை படையெடுத்து வைரங்களையும், முத்துக்களையும் அள்ளிக்கொண்டு சென்று, அரண்மனையில் உள்ள ஒவ்வொரு அறையிலும் குவித்து வைத்தான். இறுதியில் அவன் மரணமடையும்பொழுது இதனை யெல்லாம் ஏன் இவ்வளவு கஷ்டப்பட்டுக் கொள்ளையடித்தோம் என்று மனம் வருந்தினன். அவன் பெரிய சக்கரவர்த்தியாயிருந்தும், உலகிலுள்ள சிறந்த செல்வங்களை யெல்லாம் கொள்ளை அடித்தும் இறக்கும்பொழுது எதுவும் தன்னுடன் வராது என்பதனை அறிந்து அழுதான். ஆகையால் அன்புடன், இரக்கத்துடன், வாழக் கற்றுக் கொள்ளவேண்டும். கிராமதானத்தைவிட பிரேம (அன்பு) தானத்தையே பெரிதாக எண்ணுகிறேன்.

ஒரு கிராமத்தில் இருக்கின்ற குழந்தைகள் அனைத்தையும் தன்னுடைய குழந்தைகளாகவே ஒரு தாய் கருதவேண்டும். அதைப்போல ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு பெண்மணியையும் தன்னைப் பெற்ற தாயாகவே கருதி, அவள் ஏதாவது வேலை சொன்னல் அன்புடன் செய்ய வேண்டும். அப்பேர்ப்பட்ட நிலைமையை ஏற்படுத்தத்தான் பாபா வந்திருக்கிருர். பாபா வந்துவிட்டாரே என்று பயந்துகொண்டு இருந்தீர்களானல், இத்தனை ஆயிரம் மைல் நடந்து வந்த நான் உங்கள் வீட்டிற்கே வரமாட்டேனு? தமிழகத்தில் கோவில் இல்லாத ஊரே கிடையாது. கோவிலை மையமாகக்கொண்டே ஒவ்வொரு கிராமமும் அமைந்திருக்கிறது. ஆதலால் தமிழ்நாட்டு மக்களை பக்தர்கள் என்றே கருதுகிறேன். அன்பு மொழிதான் பெரிய மொழி; அம்மொழி அனைவருக்கும் தெரிய வேண்டும். அம்மொழியினை நீங்கள் படித்திருப்பதனுல்தான் பாபாவை அன்புடன் வரவேற்றீர்கள்.

(களியாம்பூண்டி, 15–6–56)

7. தனி உடைமையின் தீமை நீங்கும்

இதுவரையிலும் நான் செய்துவந்த வேலைக்கும் இப்பொழுது நான் செய்துவரும் வேலைக்கும் எந்த வேற்றுமையும் இல்லையென்பதை சிலர் புரிந்துகொள்ளவில்லை. கிராமத்தில் நிலமில்லாதவர்கள் யாரும் இருக்கக்கூடாது என்பது நமது முதல்படி. கிராமத்தில் நிலச் சொந்தக்காரர் யாரும் இருக்கக்கூடாது என்பது கடைசிப்படி. தனி உடைமையை நான் ஒழித்து வருகிறேன். ஆனால் தனி உடைமையினால் ஏற்படும் அனுகூலங்களை பயன் படுத்திக் காப்பாற்ற விரும்புகிறேன்.

கிராமதானத்திற்குப் பிறகு கிராம நிலம் முழுவதும் ஒரே நிலமாக இருக்கும் என்றும் அதன்மீது டிராக்டர் உபயோகிக்கப்படுமென்றும் கருதுவது தவறு. கிராம தானத்திற்குப் பிறகு ஒவ்வொரு குடும்பத்திற்கும் சாகுபடி செய்வதற்கு நிலம் கொடுக்கப்படும். ஐந்து பேர் அடங்கிய குடும்பத்திற்கு ஐந்து ஏகரா நிலமும் ஏழு பேர் அடங்கிய குடும்பத்திற்கு ஏழு ஏகரா நிலமும் கொடுக்கப் படும். இவ்விதம் ஒவ்வொருவரும் மிகுந்த ஆர்வத்தோடு நிலத்தில் பாடுபடுவார்கள். ஆனால் நிலம் கிராமத்திற்கே சொந்தமாகும். கிராமத்திலுள்ள மக்கள் அனைவரும் ஒரே குடும்பமாகக் கருதி ஒருவருக்கொருவர் உதவி செய்து வருவர். ஆகவே எனது திட்டத்தில் தனித்தனி நிலங்களால் ஏற்படுகிற நன்மைகளும் உண்டு. அதோடு கூட தனி உடைமை நீக்கப்படுவது காரணமாக தனி உடைமையின் தீமைகளும் மறைந்து விடும்.

(அக்டோபர், 1955)

8. மறவாப்பாளய கிராமதானம்

ஒரு கிராமத்திற்கு அதிகாரத்தைக் கொடுப்பதால், அந்த கிராமத்திற்கு அதிகாரம் வந்துவிடாது. கிராமத்தார் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். கிராமக் காரியங்களை நாமே நடத்திக்கொள்ளலாம் என்று கிராம மக்களுக்குப் புலப்படும் போதுதான் அதிகாரம் கிராமத்தினர் வசம் வரும். அந்த முறையில் எடுத்து வைக்கும் சிறந்த அடியின் முன்னேற்றத்தில் முதற்படிதான் கிராம தானம். உங்கள் ஊருக்குப் பக்கத்தில் ஒரு கிராமதானம் கிடைத்திருக்கிறது. அதன் பெயரை நீங்களும் நானும் மறக்க முடியாது. ஏனென்றால் அதன் பெயரே மறவாப் பாளையம் என்பதாகும். அந்த கிராமத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இரண்டு நாட்களுக்கு முன்னர் என்னை தாராபுரத்தில் வந்து சந்தித்தனர். இன்று அவ்வூர் சகோதரிகளும் என்னைச் சந்திக்க வந்திருந்தனர். அவர்களுடன் பேசியதில் நான் மிகவும் சந்தோஷமடைகிறேன். கிராம சம்பந்தமாக பல கேள்விகள் கேட்டேன். அவர்கள் அளித்த விடையிலிருந்து, எவ்வளவு விழிப்புணர்ச்சியுடன் இருக்கிறார்கள் என்பது தெரியவந்தது. இம்மாதிரி கிராமத்துப் பெண்களும்கூட விழித்துக் கொண்டால் அந்தக் கிராமத்தின்மீது மேலிருந்து வரும் எந்த சுல்தான் ஆட்சியும் நடக்காது.

9. யுத்த காலத்திலும் தப்பும்

உலக மகாயுத்தம் எப்போது ஆரம்பிக்கும் என்று சொல்ல முடியாதபடி இருக்கிறது. அவ்வாறு ஆரம்பித்தால் பாரத நாடு அந்த யுத்தத்தில் சேராவிட்டாலும், பாதிக்கப்படாமலிருக்க முடியாது. கிராமங்களெல்லாம் கஷ்டப்படும்; விலைவாசி ஏறும்; வெளிப்பொருள்கள் உள்ளேயும், உள்நாட்டுப் பொருள்கள் வெளியேயும் போக

முடியாது ; ஐந்தாண்டுத் திட்டம் விழுந்துவிடும். ஆனால் அந்த நிலையிலும், கிராமதானமாகக் கிடைத்த கிராமங்கள் பாதிக்கப்படமாட்டா. ஏனெனில் அங்கு அனைவருக்கும் நிலம் விநியோகமாகி இருக்கும் ; தேவைப் பொருள்களை யெல்லாம் அங்கேயே உற்பத்தி செய்துகொள்வார்கள். அங்கு பாலும் நெய்யும் தயார் செய்யப்பட்டு அங்கேயே உபயோகிக்கப்படும். காய், கனிகள் உணவு தானியங் கள் அங்கேயே உற்பத்தியாகும். தேவையான பருத்தி பயிரிட்டு, நூல் நூற்று வேண்டிய துணியை நெய்து கொள்வார்கள். கரும்பிலிருந்து வெல்லம் காய்ச்சிக் கொள்வர். எண்ணெயும் கிராமத்திலேயே செக்கில் ஆட்டப்படும். இவ்வாறு வாழ்க்கைக்கு அத்தியாவசிய மாகத் தேவைப்படும் எல்லாப் பொருள்களும் கிராமத்தி லேயே பூர்த்தி செய்துகொள்ளப்படும். மண்ணெண் ணெய் போன்ற பொருள்களின் விலை வேண்டுமானால் கிராக்கியாயிருக்கும். ஆனால் மற்ற கிராமங்களில் ஏற் படும் கஷ்டத்தைவிட மிகக் குறைந்த அளவு கஷ்டம் தான் கிராமதானச் சிற்றூர்களுக்கு ஏற்படும் என்பது நிச்சயம்.

பிரளய காலத்திலும் மார்க்கண்டேயன் மட்டும் தப்பி நீந்திக் கொண்டிருந்தான். அதுபோல கிராமதான கிரா மங்கள் பிரளய காலத்திலும் உயிரோடு நிலைத்திருக்கும். யுத்தம் ஏற்பட்டால் அப்பேற்பட்ட கிராமங்கள் தான் தப்பிப் பிழைக்கும். மற்ற கிராமங்களால் முடியாது. இந்த நிலை மிகவும் தெளிவானது. கிராமதானக் கருத்தை ஏற்றுக்கொண்ட கிராமங்களை உலகயுத்தம் ஒன் றும் செய்துவிட முடியாது.

அஹிம்சையின் பரிசோதனை நடந்து கொண்டிருக் கிறது. நாலா பக்கமும் கும்பிருட்டு மண்டிக் கிடக்கிறது ; சிறிய விளக்கொன்று ஏற்றப்படுகிறது. அந்த விளக்கை இருட்டு ஒன்றும் செய்துவிடமுடியாது. இருட்டினால் விளக்கை எதிர்த்துப் போரிட முடியாது. ஏனெனில்

விளக்கு சுயமாகவே ஒளி பொருந்தியது. கிராமதானக் கருத்தை ஏற்று எந்தக் கிராமம் அதன் வழியில் செயல் படுகிறதோ, அந்தக் கிராமத்தில் அறிவு ஒளி ஏற்றப்பட்டு விடும்.

10. தமிழரின் அறிவுக்கு உகந்தது

கிராமதானத்திற்குத் தமிழ் நாட்டின் இயற்கை சுபா வம் அனுகூலமாக அமைந்திருக்கிறது. என் அனுபவத் தைக் கொண்டே இதைக் கூறுகிறேன். தமிழ் மக்கள் படித்தவர்கள், அறிவாளிகள், சிந்திப்பவர்கள், எதையும் அலசிப் பார்ப்பவர்கள். ஆகையால் தமிழ் நாட்டில் கிராம தானத்திற்கு அனுகூலம் குறைவு என்று சிலர் கூறுகின் றனர். அதாவது அவர்கள் சொல்வதின் அர்த்தம் என்ன வென்றால் பாபாவின் காரியத் திட்டம் அறிவில்லாத மக்க ளுக்குத்தான் அனுகூலம் என்பதாகும். ஆனால் உண்மை நிலை இதற்கு மாறானது என்பேன். ஒன்றும் தெரியாத வர்களுக்கு ஒரு காரியத்தை எடுத்துச் சொல்வது சுலபம்தான், சந்தேகமில்லை. ஆனால் மிகுந்த அறிவாளி களுக்கு எடுத்துச் சொல்வது இன்னும் சுலபமானது. இரண்டிற்கும் இடையில் கொஞ்சம் அறிவுமட்டும் இருப் பவர்களுக்குச் சொல்வதுதான் கஷ்டமான காரியம். தமிழ் நாட்டு மக்கள் அவ்வாறு அரைகுறை அறிவுள்ளவர்களாக இல்லை என்பதுவே நான் கண்ட அனுபவம். தமிழ் மக்கள் நன்கு சிந்திக்கும் ஆற்றல் உள்ளவர்கள். இங்கு கிராமதானக் கருத்துக்கு மிகவும் ஆதரவு கிடைக்கும் என்பது நிச்சயம். இரண்டு வருஷமாககிராமதானம் பற்றி தீவிரமாக ஆலோசித்துத்தான் மறவாப் பாளை யத்தை கிராமதானமாகச் செய்ததாக அந்த கிராமவாசிகள் கூறினர்.

(தாராபுரம், 11–11–56)

11. ராமராஜ்யத்திற்கு அஸ்திவாரம்

கோவிலை மையமாக வைத்து கிராமங்கள் இப்பக்கம் அமைந்திருப்பதில் ஒரு ஆழ்ந்த கருத்து இருக்கிறது. கிராம மக்கள் அனைவரும் அந்தக் கோவிலிலிருக்கும் கடவுளை உபாசனை செய்வதற்காகவே அங்குக் குடியிருக்கிருர்கள். ஆகவே, முழு நம்பிக்கையோடு கிராமங்களுக்குச் சென்று அன்போடு கருத்துக்களை அவர்களிடம் எடுத்துச் சொன்ஞல் நூற்றுக்கணக்கான கிராம தானங்கள் கிடைக்கும் என்பதை எனது சக ஊழியர்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

கிராமதான மென்பது ராமராஜ்யத்திற்கு அஸ்திவாரமாகும். கிராமதானம் கிடைத்த பின்பு கடவுள் உபாசனைக்காகத் தனிக் கோவில் தேவையில்லை. ஒவ்வொரு கிராமமும் ஒரு கோவிலாக மாறும். கிராமத்திலுள்ள வயல், மண் இவையெல்லாம் கடவுளின் பிம்பங்களாகக் காட்சியளிக்கும். வயலில் உழப் போகின்றவர்கள் ஈசுவர பக்திக்காகச் செல்வதாக நினைப்பார்கள். கிராமம் கடவுள் அம்சம் நிறைந்து காட்சியளிக்கும். வயலிலிருந்து எது உற்பத்தியாகிறதோ அதை ஆண்டவனுக்கு அர்ப்பணிப்பதற்காக உற்பத்தியானதாகக் கருதுவார்கள். பின்பு அவர்களின் ஒவ்வொரு காரியமும் ஈசுவரார்ப்பணமாகப் பரிணமிக்கும்.

(14-11-56)

12. ஆறுமுகனுக கிராமதான வழி

ஆறுமுகத்தைக் கொண்டிருப்பதால் பழனியாண்டவர் பலமுள்ளவராகக் காட்சியளிக்கிருர். கிராமவாசிகள் ஒரு முகத்தை மட்டும் கொண்டிருந்தால் பலம் பெறமுடியாது. ஆகவே, ஒவ்வொரு வீட்டிலும் அங்கிருக்கும் 5 நபர்களோடு ஆருவது நபராகிய தரித்திர நாராயணனை

யும் சேர்த்துக் கொண்டால் ஆறுமுகனுகி, அவனேயொத்த பலசாலியாகலாம்.

ஆனுல் இன்று, கிராமங்களில் ஒவ்வொரு முகம் தானிருக்கிறது. ஒரு முகத்திற்கும் இன்னெரு முகத் திற்கும் பகை. ஒவ்வொரு முகமும் ஒவ்வொரு பக்கம் திரும்பி நவக்கிரகங்கள் போல் அமைந்திருக்கின்றன. ஆறுமுகனுடைய ஆறுமுகங்களும் வரிசையாக ஒரே பக்கம் நோக்கியிருக்கின்றன. ஆகவே இதுபோன்று ஆறுமுகனுக வழிதான் கிராமதானம். இதைப் புரிந்து கொண்டு, இம்முறையில் செயல்படுவதற்கான அறிவை உங்களுக்குக் கொடுக்குமாறு பழனியாண்டவரின் கிருபை கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்.

(புளியம்பட்டி, 15–11–56)

13. அரசாங்கத்தின் பொறுப்பு குறையும்

பயமற்றதும், பொறுப்புணர்ச்சியுள்ளதும், ஆக்க வேலையில் ஊக்கமுள்ளதுமான சமூகமே நிலைக்க முடியும். கிராமதானம் ஏற்பட்டு கிராம ராஜ்யம் அமைப்போமானுல் இப்புது சமுதாயம் உருவாகும். மக்கள் அனைவரும் அன்புடன் ஒத்துழைத்து சமமாகப் பங்கிட்டுக்கொண்டு வாழ்வார்கள். உலக மகா யுத்தத்தால் ஏற்படக்கூடிய கேடுகள் இவ்வகையான கிராமங்களைப் பாதிக்காது. அன்றுடத் தேவைகளுக்கான பொருள்களை திட்டமிட்டு கிராம மக்கள் தாங்களே தயார் செய்து கொள்வார் களென்ருல் யுத்த நிலையால் விலைவாசிகள் உயர்ந்து விட்டாலும் அதனுல் கிராம மக்கள் துன்பப்பட மாட்டார்கள்.

நாட்டிலுள்ள கிராம மக்கள் சுபிக்ஷமாக இருக்க வேண்டுமானுல் குறைந்த பக்ஷம் இரு ஆண்டுகளுக்குத் தேவையான உணவு தான்யம் ஒவ்வொரு குடும்பத்திலும் சேமித்து வைக்கப்பட வேண்டும். இன்று கிராமக் கைத்

தொழில்கள் இல்லாததால் உணவு தான்யத்தை விற்று அன்றாடத் தேவைப் பொருள்களை வாங்கவேண்டிய நிர்ப்பந்தம் கிராம மக்களுக்கு ஏற்படுகிறது. எனவே கிராமதான கிராமங்களில் கிடைக்கும் மூலப் பொருள்களை அங்கேயே ஆக்கப் பொருளாக மாற்றி உபயோகித்துக் கொள்வதால் கிராம மக்களுக்கு தொழில் கிடைப்பதுடன் பணத்திற்காக தன் விளைபொருள்களை விற்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படாது. இந்த நிலையில் உலகமே யுத்தத்தால் கொந்தளிப்புற்றாலும் கிராமம் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளும்.

கிராமங்கள் தங்கள் தேவையைத் தாமே கவனித்துக் கொள்ளுமாயின் அந்த அளவிற்கு அரசாங்கத்தின் பொறுப்பும் குறையும். எனவே இந்த வகையில் நாம் நம் அரசாங்கத்திற்கும், அதன் மூலம் நாட்டிற்கும் உதவுவதாகும். தமிழ் நாட்டு மக்களின் உள்ளம் தற்போது திறந்திருப்பது கண்டு மகிழ்கிறேன். தமிழ் மக்கள் அறிவுள்ளவர்கள், சிந்திப்பவர்கள். நல்லது என்று கண்டு ஏற்றுக் கொண்டால் பின்பு கெட்டியாகக் கருத்தைப் பிடித்துக் கொள்வார்கள். எனவே கிராமதானக் கருத்து இங்கு வேர் ஊன்றியிருக்கிறது.

பூமிதானம், கிராமதானம் என்ற கொள்கையோடு நான் தென்னாட்டிற்கு யாத்திரை வந்திருக்கிறேன். இனி கிராம ராஜ்யம் என்ற சமுத்திர நீரை இவ்விடம் இருந்து எடுத்துக் கொண்டு மற்ற மாகாணங்களில் யாத்திரை செய்ய விரும்புகின்றேன். பூர்ண குடும்பத்தோடு என்னை வரவேற்கும் தோரணையிலிருந்தே தமிழ் மக்கள் இக் காரியத்தைப் பரிபூரணமாகச் சாதிப்பார்கள் என்று நம்புகிறேன்.

(பழனி, 22-11-56)

14. அறநெறிச்சக்தி வளரும்

நிலம் உழுபவருக்குத்தான் சொந்தம் என்று சிலர் கூறுகிருர்கள். இது தவருன கருத்து. நீரும் காற்றும் மக்கள் எல்லோருக்கும் பொதுவாக இருப்பது போல நிலமும் எல்லோருக்கும் சொந்தமாக இருக்கவேண்டும். ஒரு சிலர் விவசாயத்திலும், வேறு சிலர் வேறு ஏதாவது தொழில்களிலும் ஈடுபடுகிருர்கள். இது சௌகர்யத்திற் காகச் செய்யப்பட்ட ஏற்பாடே. ஆகையால் கிராமத்திற் குத் தேவையான வேறு தொழில்களில் ஈடுபட்டவர்கள், வயலில் நேரடியாக வேலே செய்யவில்லே என்பதற்காக நிலம் அவர்களுக்குச் சொந்தமில்லே என்பது தவறு. பாபாவின் கருத்துக்கும், கம்யூனிஸ்டுக்கள் கருத்துக்கும், பாபாவின் கருத்துக்கும் முதலாளித்துவ கருத்துக்கும் உள்ள வித்தியாசம் இதுதான். கிராம நிலம் முழுவதும் கிராமத்திற்குப் பொது. ஓர் ஊரில் அதிக நிலமிருந்து ஜனத்தொகை குறைவாக இருக்கும்போது, பக்கத்து கிராமத்திலுள்ள ஜனத்தொகைக்குத் தகுந்தபடி அங்கு நிலம் இல்லேயென்ருல் அக்கிராம மக்கள் சிலருக்கு நிலம் அதிகமுள்ள கிராமத்திலிருந்து நிலம் கொடுக்கலாம். ஏனென்ருல் நிலம் அனேவருக்கும் சொந்தம்.

இக்கருத்தை நன்ருக உணர்ந்து கொண்டு நிலமனேத் தையும் கிராமத்திற்குப் பொதுவாக்கி, கிராமதானம் செய் தால் பாரதநாட்டின் அறநெறிச் சக்தி வளரும்; செல்வம் செழிக்கும். இக் கருத்தை மக்களிடம் எடுத்துச் சொல் வதற்கு ஆயிரக்கணக்கான ஊழியர்கள் கிராமம் கிராமமாக யாத்திரை செய்யவேண்டும். தூய்மையான தபசு நடை பெறுமிடத்தில் நிச்சயமாக மனமாற்றம் ஏற்படும். இவ்வாறு மக்களே அணுகி நிலதானம் கேட்பதற்கு ஊழியர் களிடம் அன்பு மிகுந்திருக்க வேண்டும். அரசாங்கத்தால் செய்ய முடியாத காரியத்தைக் கூட பூமிதானம், கிராம தானங்கள் சாதிக்க முடியும்.

(கே. கல்லுப்பட்டி, 5–12–56)

15. முதலில் கிராமதானம் ; பின்பு பஞ்சாயத்து

அரசாங்கத்தின் சார்பில் கிராமங்கள் தோறும் பஞ்சாயத்துக்களை அமைப்பதற்கான தீவிர முயற்சி செய்யப்பட்டு வருகிறது. முதலில் கிராமப் பஞ்சாயத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது தவறு. கிராமத்திலுள்ள நிலம் பிரிவினை செய்யப்படாமல் செல்வர் என்றும், ஏழை யென்றும் ஏற்றத் தாழ்வு இருக்கும்போது கிராமப் பஞ்சா யத்து ஏற்படுத்துவது சரியானதல்ல. அவ்வாறு செய்தால் அதிகாரம் யார் கையில் போய்ச் சேரும்? ஏற்கனவே நிலமும் பணமும் கல்வியும் அரசாங்கச் செல்வாக்கும் பெற்ற முக்யஸ்தர்கள் கையில்தான் பஞ்சாயத்தின் ஆட்சி சிக்கும். கிராமத்தினரைக் கொள்ளையடிப்பதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பையே அவர்களுக்குக் கொடுக்கும். ஆகையால் முதலில் நிலத்தைப் பிரிக்கவேண்டும். அதன் பிறகு ஏற்படும் பஞ்சாயத்துதான் ஊழியர்களுடைய பஞ் சாயத்தாக இருக்கும்.

சமையல் செய்வதற்கு அடுப்பு, பாத்திரம், தண்ணீர், அரிசி ஆகியவைகள் தேவை யென்ருலும் செய்யவேண் டிய முறையில் செய்யவேண்டு மல்லவா? நெருப்பை மூட்டி, நீரைக் கொட்டி, அரிசியை அதில் போட்டு அதற்கு மேல் பாத்திரத்தை வைத்தால் சமையலுக்குத் தேவை யான நான்கு பொருள்கள் இருந்தாலும் சோறு என் னவோ கிடைக்காது. ஆகவே முதலில் கிராம தானம் செய்த பிறகுதான் கிராமப் பஞ்சாயத்து ஏற்படவேண் டும். அதுதான் முறையானதாக இருக்கும்.

ஆட்சிப் பொறுப்பு டெல்லியிலும் சென்னையிலும் குவிந்திருக்கக் கூடாது. ஆகையால் வெகு சிக்கிரம் ஆட்சியைப் பிரித்து கிராமப் பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்த வேண்டுமென்று அரசாங்கத்தினர் நினைக்கிருர்கள். இவ் வாறு நினைப்பது சரிதான். ஆனுல் இன்றுள்ள நிலையில்

அதிகாரத்தைப் பிரித்தால் என்ன ஏற்படும்? சென்னையிலுள்ள மிருகக் காட்சி சாலையில் 50 புலிகளை அடைத்துப் போடுவதைவிட கிராமத்திற் கொன்றாக அவிழ்த்துவிட்டால் என்ன என்று கேட்பதை ஒக்கும். அதேபோல இன்றுள்ள நிலையில் ஒவ்வொரு கிராமத்திலும் அதிகாரம் பிரிக்கப்படுமானால் துன்புறுத்தும் சக்தி பஞ்சாயத்தினருக்குக் கிடைத்துவிடும். பஞ்சாயத்து என்பது அதிகாரம் செலுத்தும் ஸ்தாபனமாக ஆகக்கூடாது, சேவை செய்யும் ஸ்தாபனமாக அமையவேண்டும். இவையெல்லாம் செய்வதற்கு அன்பு நிறைந்து வடியவேண்டும். ஆகையால் நம் ஊழியர்கள் அனைவருக்கும் அத்தகைய அன்பையும் அறிவையும் வழங்க ஆண்டவனை அடிக்கடி பிரார்த்திக்கிறேன். பூமிதானக் கமிட்டிகள் கலைக்கப்பட்ட பிறகு இதை ஏற்று நடத்தும் பொறுப்பு நிர்மாணத் தொண்டர்களுக்கும் நாட்டு மக்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது.

(கே. கல்லுப்பட்டி, 5–12–56)

16. பிர்க்கா தானம், தாலுகா தானம்

“இப்பொழுது கிராம தானத்திற்குக்கூட அவ்வளவு அதிக மதிப்பில்லை. பிர்க்கா தானம், சர்க்கிள் தானம், தாலுகா தானங்கள் கிடைக்கவேண்டும். இது நடக்கக் கூடும். ஒவ்வொரு கிராமமாகச் சென்று எடுத்துச்சொன்னால் ஏன் நடக்காது?” என்று விநோபாஜி கேட்டார்.

நூற்றுக்கு 50 தானம் கிடைத்தால் போதும், திருப்தியடையவேண்டும் என்கிறார்கள் சிலர். நூற்றுக்கு நூறும் கிடைக்கவேண்டும். 100 பேரில் எத்தனைபேர் சாவார்கள்? 100 பேரும் இன்றில்லாவிட்டாலும் என்றாவது எப்படியும் சாகத்தானே போகிறார்கள். சாவதற்கு 100-க்கு 100 என்றால் வாழ்வுகொள்வதற்கு 100-க்கு 100 பேரும் ஏன் முயற்சிக்கக் கூடாது? ஆகவே அத்தனை கிராமங்களும்

அவ்வாறு செய்துவிட்டால் பெரிய மனிதர்கள் இது என்ன அற்புதம் என்று பார்ப்பார்கள். பெரிய ஆசாமிகளின் உள்ளம் சிறியதாக இருக்கும். கிராம மக்களின் உள்ளம் சமுத்திரம் போன்று விசாலமானது. ஆகையால் புரட்சி என்பது கிராமத்தில்தான் ஏற்படும். பின்பு அதைப் பற்றிய சரித்திரம் எழுதுவதற்கு நகரத்தினர் ஓடிவருவர்.

கிராம தானத்தில் நன்மையே தவிர வேறு இல்லை என்ற பூரண நம்பிக்கை ஏற்படவேண்டும். கிராமதானம் என்பது கலப்பற்ற பசும்பொன் போன்றது. இவ்வழியில் நீங்கள் செயலாற்ற உங்களுக்கு ஆண்டவன் சக்தி கொடுக்கட்டும்.

(5–12–56)

17. நகரத்தின்மீது செல்வாக்குப் பெருகும்

கிராம வாழ்வின் செல்வாக்கு நகரங்களின் மீது ஏற்படுமளவு கிராமத்தின் சக்தி பெருக வேண்டும். ஜாதி வித்தியாசங்கள், பொருளாதாரத் துறையில் ஏற்றத் தாழ்வு, தீண்டப்படுவோர், தீண்டப்படாதார் என்ற வித்தியாசம், என்ற நிலைமை இருக்கும் வரை கிராமங்களின் சக்தி பெருகாது. இந்த நிலை நீடித்தால் கிராமங்கள் நகரத்தின் சூழ்ச்சியில் சிக்குவதைத் தவிர வேறு வழியில்லை. ஆகவே, கிராம மக்கள் ஒன்றுகச் சேர்ந்து தங்களுக்கு என்று கிராமத்தின் சக்தியை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அவ்வாறு செய்தால்தான் முன்னேற்றமுண்டு. நகரத்தின்மீது தனது செல்வாக்கைச் செலுத்த கிராமங்களுக்கு கிராம தானத்தைத் தவிர வேறு வழியில்லை. கிராமதானம் செய்து மற்ற அத்தியாவசியத் தேவைகளுக்கெல்லாம் கிராமத்திலேயே குடிசைக் கைத் தொழில்கள் மூலம் பொருள்களை உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்தால்தான் நம்மிட

மும் பலம் இருக்கிறது என்ற உணர்ச்சி கிராமத்திற்குத் தோன்றும்.

(தேவதானப்பட்டி, 6–12–56)

18. இன்றைய நிலையிலிருந்து விமோசனம்

இன்றைய நிலைமையைச் சிந்தித்துப் பாருங்கள். ஒவ்வொரு கிராமமும் கவலையில் ஆழ்ந்துள்ளது. ஆனால் கிராம தானம் உருவெடுக்கும் பொழுது கவலைகளும், துன்பங்களும் பறந்தோடிவிடும். இன்று எத்தனையோ குடும்பங்களில் உள்ள குழந்தைகள் உணவின்றி, உடையின்றி, கல்வி கற்க வசதியின்றி எவ்வளவு இன்னல்கள் அடைகிறார்கள்? கிராமதான கிராமங்களில் இத்தகைய நிலைமை இராது. எல்லாக் குழந்தைகளுக்கும் உணவும், உடையும், வாழ்விற்குத் தேவையான ஆதாரக் கல்வியும் கிடைக்கும். இப்பொழுது கோராபுட் மாவட்டத்தில் கிடைத்துள்ள கிராம தானங்களில் இத்தகைய முன்னேற்றங்களைக் காணலாம். அங்கே சர்வ சேவா சங்கமும், தாலிமீ சங்கமும், கஸ்தூரிபா டிரஸ்டும் முழுமூச்சுடன் புனருத்தாரண வேலைகள் செய்து கொண்டிருக்கின்றன.

19. நகரப் பிடிப்பினின்று விடுதலை

கிராம தான கிராம மக்கள் நகரத்திலிருந்து விடுதலை பெற்று வாழ்வார்கள். கிராமதானம் உருவாகிய பின்னர் எதற்கும் நகரங்களை நாடிச் செல்லமாட்டார்கள். கிராமத்தில் விளையும் எள்ளையும், கடலையையும் கொண்டு எண்ணெய் ஆட்டுவார்கள். அப்பொழுது அவர்களுக்கு வயல்களுக்கு வேண்டிய புண்ணாக்கு உரமும் கிடைக்கும். ஓய்வு நேரங்களில் பருத்தியைக் கொண்டு நூல் நூற்று

ஆடை நெய்து கொள்வார்கள். அப்பொழுது அவர்கள் ஆலைத் துணிகள் அணியவும் மாட்டார்கள். ஆடைகள் வாங்குவதற்காக உணவுப் பொருள்களை விற்கவும் மாட்டார்கள். கிராமத்தில் கிடைக்கும் கல்லையும், மண்ணையும் கொண்டு வீடுகள் கட்டிக்கொள்வார்கள். கிராமப் பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்தி கிராம சுகாதாரம், கல்வி போன்ற எல்லா வசதிகளையும் கவனித்துக் கொள்வார்கள்.

பஞ்சாயத்துக்களில் சேவை மனப்பான்மையும், நல்லொழுக்கமும், நன்னெறியுமுள்ள மக்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கம் வகிப்பார்கள். ஒவ்வொரு வீட்டிலும் பசு வளர்த்து வெண்ணையும், பாலும் குழந்தைகளுக்குக் கொடுத்து, பலவான்களாகச் செய்வார்கள். இப்பொழுதுபோல அவைகளை நகரங்களில் குறைந்த விலைக்கு விற்கமாட்டார்கள். கிராமம் சுயதேவைப் பூர்த்தியடையும் பொழுது பணத்தேவையோ நகரத்திற்கு செல்ல வேண்டிய அவசியமோ இல்லாமல் போகும். அப்பொழுது நகரங்களில் உள்ள மக்கள் வெண்ணெய், நெய் வாங்குவதற்கு கிராமத்தை நோக்கி வருவார்கள். தேவைக்கு மிகுதியாக இருந்தால் கிராம மக்கள் நியாயமான விலைக்குக் கொடுப்பார்கள்.

20. சாம்ய யோகம்

கிராமத்தில் ஒருவருக்கு நோய் ஏற்பட்டால் எல்லோரும் அதைப்பற்றிச் சிந்திப்பார்கள். இன்றைய நிலைமை என்னவென்று பாருங்கள். செல்வந்தர் ஒருவருக்கு நோய் வந்தால் சிறந்த மருத்துவ மனையை நாடிச் சென்னைக்குச் செல்லுகிறார். அவருக்காக அமெரிக்காவிலிருந்து மருந்துகள் தருவிக்கப்படுகின்றன. ஆனால் அவருக்கு அருகில் வாழும் ஓர் ஏழை நோய்வாய்ப்பட்டால் எவ்வித உதவியுமின்றி அவதியுறுகிறார். மனிதருக்குள் பிறப்பிலும், இறப்பிலும் இறைவன் எவ்வித

வேற்றுமையையும் ஏற்படுத்தவில்லை. செல்வந்தர்கள் வீட்டுக் குழந்தைகள் மட்டும் பிறக்கும் பொழுது ஆபரணங்கள் அணிந்து கொண்டா பிறக்கின்றன? ஆகையால் வாழ்கின்ற சிறிது காலத்தில் சாம்ய யோகத்தைப் பற்றி கிராம மக்கள் சிந்திப்பவர்களாக இருப்பார்கள்; தங்களுக்கு ஏற்படும் நலனைப் போலவே மற்றவர்களுக்கும் ஏற்பட வேண்டும் என்ற எண்ணம் உடையவர்களாக இருப்பார்கள். இதனையே அன்பு, தயை, கருணை என்று சொல்லுகிறோம். இத்தகைய சிறந்த குணங்கள் உள்ளவர்களாக கிராமதான மக்கள் விளங்குவார்கள்.

21. நிர்மாண ஊழியர்களுக்கு அழைப்பு

காந்தியடிகள் வகுத்துத்தந்த பல்வேறு நிர்மாணத் திட்டங்களில் இன்றைக்கு எத்தனையோ ஊழியர்கள் தனித் தனித் துறைகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பாபா ஒரு அழைப்பு, வேண்டுகோள் விடுகிறார். எல்லா நிர்மாண ஊழியர்களும் கிராம தானத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். கிராமதான இயக்கம் வெற்றியடைந்தால் பல்வேறு நிர்மாணத் திட்டங்களும் சுலபமாக வெற்றி பெறும். கிராமதானமாகக் கிடைத்த கிராமங்களில் நிர்மாண வேலைகள் மிகுந்த உற்சாகமாக நடைபெற்றுக் கொண்டு வருவதை அறிய வேண்டும். கிராமதானம் எல்லா நிர்மாணப் பணிகளுக்கும் சிகரம் வைத்தாற்போல் இருப்பது. சமுத்திரத்தில் எல்லா நதிகளும் வந்து கலப்பதால் சமுத்திரத்தில் நீராடினால் எல்லா நதிகளிலும் நீராடியது போலாகும். பூமிதான இயக்கத்தில் எல்லாவித நிர்மாணப் பணிகள் மாத்திரம் அல்ல, பக்தி மார்க்கப் பிரசாரமும், சமயப் பணிகளும் இருக்கின்றன. இதனை எல்லோரும் உணரவேண்டும். கிராமதான இயக்கத்தால் நிலமில்லாத மக்களுக்கு நிலச்சுவான்தார்கள் நிலதானம்

தருகிறார்கள். ஆதலால் அனாவசியமான விவசாய சங்கங்கள் தேவையில்லாது போய்விடுகின்றன.

இயக்கத்திற்கு கிடைக்கின்ற நிலத்தில் மூன்றிலொரு பகுதி நிலத்தை ஹரிஜன மக்களுக்குக் கொடுப்பதால் ஹரிஜனப் பணியும் நடைபெறும். ஹரிஜனங்கள் சமுதாயத்தில் எழுச்சி பெற்று உயர்வடைவார்கள். அதனால் சமுதாயப் புரட்சியும் நடைபெறுவதற்கு ஏதுவாகிறது. கிராமம் கிராமமாகச் சென்று அன்பைப்பற்றி எடுத்துக் கூறுவதால் தர்ம பிரசாரமும் நடைபெறும். நிலச்சுவான்தார்கள் அன்பான முறையில் தானம் தருவதால் சமுதாயத்தில் ஒற்றுமையும், அன்பும் வளருவதுடன் உற்பத்தியும் பெருகும். ஆதலால் உற்பத்திப் பெருக்கப் பிரசாரம் அவசியமில்லாது போய்விடுகிறது. ஒவ்வொரு நாளும் மௌன வழிபாடு நடத்துகிறோம். இதனைவிட வேறு எவ்வழியில் எல்லா மதமக்களிடமும் கடவுள் பக்தியை ஊட்ட முடியும்? இயக்கத்தினால் உயர்வு தாழ்வு எண்ணம் ஒழிந்து பொருளாதார முன்னேற்றம் ஏற்படுகிறது.

சமூக முன்னேற்றத்திற்கு வேறுபணி தேவையில்லை. கிராமதானம் கிடைத்த கிராமங்களில் அம்பர் சர்க்காவை உபயோகிக்கிறோம். அதனால் கதர் பிரசாரமும் நடைபெறுகிறது. இங்ஙனம் எல்லா நிர்மாணக் காரியங்களுக்கும் மிகுந்த உற்சாகம் கிடைக்கிறது. எனவே சேவை மனப்பான்மை உள்ளவர்கள் அனைவரும் இப்பணியில் இறங்கவேண்டும். தாமதத்தில் எப்பொழுதும் ரசனை இருப்பதில்லை. வெகுவிரைவில் இப்பணியினை முடிப்போமானால் நம்முடைய இலட்சிய எல்லையை அடைந்து விடுவோம்.

22. தமிழ் மக்களுக்கு வேண்டுகோள்

தற்பொழுது நான் தமிழகத்தில் அடியெடுத்து வைத்துள்ளேன். தென்னகம் பாரதத்தின் தெற்கு இறுதி எல்லையாக அமைந்திருக்கிறது. ஆதலால் பூமிதான இயக்கத்தின் இலட்சிய எல்லையையும் இங்கே காண விரும்புகிறேன். பூமிதான இயக்க முன்னேற்றப் பாதையில் மேலும் ஒரு அடி முன்னே செல்ல விரும்புகிறேன். நீங்கள் எல்லோரும் ஒத்துழைத்தால் மேற்கொண்ட பணி வெற்றி பெற்று மேலும் முன்னேறிச் செல்வேன். தமிழகத்தில் பூமிதான இயக்கப் பிரசாரத்தோடு கிராமக் குடிசைத் தொழில்களை வளர்க்கும் பணியினையும் ஆதாரக் கல்வியின் அவசியத்தை விளக்கும் பணியினையும், ஜாதி வித்தியாசங்கள் நாட்டின் முன்னேற்றத்திற்கு எங்ஙனம் முட்டுக்கட்டையாக இருக்கின்றன என்பதனை விளக்கி, அவை ஒழிய வேண்டிய அத்யாவசியத்தை எடுத்துக் கூறும் பணியினையும், கதர் பிரசாரப் பணியினையும் மேற்கொண்டிருக்கிறேன். இப்பொழுது தமிழ் நாட்டில் கிராமக் குடிசைத் தொழில்கள் நடைபெற்று வந்தாலும் ஆதாரக் கல்வி போதிக்கப்பட்டு வந்தாலும் இன்னும் அவைகள் அதன் எல்லைக் கோட்டை அடையவில்லை.

தமிழகத்தில் கிராம தானத்திற்கு ஏற்ற சூழ்நிலை இருக்கிறது. உண்மையான கிராமப் பாவனையை ஒவ்வொரு கிராமத்திலும் பார்க்கிறேன். ஒவ்வொரு கிராமமும் கோவிலை மையமாகக் கொண்டே அமைந்திருக்கின்றது. சிறிய ஊர்களில்கூட பெரிய கோவில்களைப் பார்க்கிறேன். இங்கிருக்கும் சிறிய கோவில்கள் வட இந்தியாவில் இருக்கும் பெரிய கோவில்களுக்குச் சமமாக இருக்கின்றன. எனவே ஆழ்வார்களும், நாயன்மார்களும், ஆச்சாரியர்களும், சைவ சமயப் பெரியார்களும் அளித்த ஞான போதனை இன்னும் கிராமங்களில் இருக்கவே செய்கிறது.

தமிழர்கள் பரந்த உள்ளம் படைத்தவர்களாதலால் தான் பாரதியார் கூட "தானத்திலே சிறந்த நாடு" என்று பாடியிருக்கிறார். திருக்குறளில் திருவள்ளுவர் "யாருடைய உள்ளத்தில் அன்பு ததும்புகிறதோ அவர்கள் தங்கள் எலும்புகளைக் கூட பிறருடையது என்று எண்ணுகிறார்கள்" என்று கூறுகிறார். திருக்குறளில் ஒப்புரவைப் பற்றி திருவள்ளுவர் அழகான கருத்துக்களையெல்லாம் கூறுகிறார். ஆதலால் குறளின் பிரபாவம் சிறிதளவாவது தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கவே செய்யும். அதனுல்தான் தமிழகத்தில் கிராமதான இயக்கம் எளிதாக வெகு விரைவில் வெற்றி பெறும் என்று நம்புகிறேன். மேலும் தமிழகத்தின் இலக்கியங்கள் எல்லாம் மிகவும் பழமையானவை. அவைகளில் இன்றைய பூமிதான இயக்கத்தின் இலட்சியங்களும், தனியுடைமை கூடாதென்ற கருத்தும், எல்லாம் இறைவனுடைய உடைமை என்ற கருத்தும் மலிந்து கிடக்கின்றன. எனவே தமிழகத்தில் ஆயிரம் ஆயிரம் கிராமங்கள் கிராமதானங்களாகக் கிடைக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

அனுபந்தம்

அஹிம்சை முறையில் கிராமப் பொதுவுடைமை

[சுப்பிரமணிய பாரதியார்]

[இக் கட்டுரையை பாரதியார் ரஷ்யப் புரட்சி நடந்த பின் எழுதி இருக்கக்கூடும். அன்று அவர் கூறியதற்கும் வினேபாஜியின் இன்றைய பூமிதான இயக்கத்திற்கும் எவ்வளவு பொருத்தம்! எல்லோருக்கும் உணவு, எல்லோருக்கும் வேலை, ஊரும் பொதுவுடமை—இவ்விதம் சௌஜன்யத்தில் அமைதியில் அற்புத சமுதாயத்தை அமைக்கும் முறையை அழகாக வர்ணிக்கிருர்.]

முக்கியமாக நாம் இந்தியாவில் இருக்கிறேமாதலால், இந்தியாவின் சாத்யா சாத்தியங்களேக் கருதியே நாம் யோசனே செய்யவேண்டும். முதலாவது, இந்தியாவிலுள்ள நிலச்சுவான்களும் முதலாளிகளும் ஐரோப்பிய முதலாளிகள் நிலச்சுவான்களேப் போல் ஏழைகளின் விஷயத்தில் அத்தனே அவமதிப்பும் குரூர சித்தமும் பூண்டோர் அல்லர். இவர்களுடைய உடைமைகளேப் பிடுங்க வேண்டுமென்ருல் அது நியாயமாகாது. அதை நம் தேசத்தில் உள்ள ஏழைகள் அதிகமாக விரும்பவும் மாட்டார்கள். எனவே, கொள்ளேகளும், கொலேகளும் சண்டைகளும் பலாத்காரங்களும் இல்லாமல் ஏழைகளுடைய பசியைத் தீர்ப்பதற்குரிய வழியைத்தான் நாம் தேடிக் கண்டுபிடித்து அனுஷ்டிக்க முயலவேண்டும். செல்வர்களுடைய உடைமைகளேப் பலாத்காரமாகப் ப்றித்துக் கொள்ள முயலுதல் இந்நாட்டிலே, நான் மேற்கூறியபடி பொருந்தவும் செய்யாது ; சாத்யமுமில்லே.

ஆனல் கோடிக் கணக்கான ஜனங்கள் வயிறு நிறைய உணவு கிடைக்குமென்ற நிச்சயமில்லாமலும், லக்ஷக் கணக்கான ஜனங்கள் ஒருவேளேக் கஞ்சி கிடைக்காமலே

சுத்தப் பட்டினியால் கோரமரண மெய்தும்படியாகவும் நேர்ந்திருக்கும் தற்கால நிலைமையை நாம் ஒரு க்ஷணம் கூடச் சகித்திருப்பது நியாயமில்லை என்பது சொல்லா மலே பொருந்தும்.

எனவே உலகத் துன்பங்கள் அனைத்திலும் கொடி தான இந்த ஏழ்மைத் துன்பத்தைச் சமாதான நெறியா லும் மாற்றக் கூடிய உபாயமொன்றை நாம் கண்டு பிடித்து நடத்துவோமானால், அதனின்றும் நமது நாடு பயனுறு வது மட்டுமேயன்றி, உலகத்தாரெல்லாரும் நம்முடைய வழியை அனுஷ்டித்து நன்மை அடைவார்கள். அப்படிப் பட்ட உபாயமொன்று கிடைக்குமா என்பதைப் பற்றி இங்கே ஆராய்ச்சி செய்வோம்.

ஜனங்களுக்குள்ளே கலகங்களும் யுத்தங்களும் கொலைச் செயல்களும் நேரிடாவண்ணம் சமாதான நெறியிலே உலகத்தின் ஏழ்மையைத் தொலைப்பதற்குத் தகுந்த உபாயமாக எனக்குத் தோன்றுவதை இங்குத் தெரிவிக்கின்றேன்.

உலகம் தேசங்களால் அமைக்கப்பட்டது. தேசம் மாகாணங்களின் தொகுதியாம். மாகாணங்கள் ஜில்லாக் களின் சேர்க்கையாகும். ஜில்லா ஒரு சில நகரங்களும் பெரும்பான்மை கிராமங்களும் கூடிய தொகுதியாகும். எனவே, ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டு அதில் வறுமையே இல்லாமல் செய்வதற்குரிய வழி கண்டுபிடிப் போமாயின், பிறகு அந்த உபாயமே பூமண்டலத்தின் வறுமையைத் தொலைப்பதற்குப் பொருந்தியதாய்விடு மென்பது சொல்லாமலே விளங்கும். திருஷ்டாந்தமாக, நான் இப்பொழுது வாசம் புரிந்துவரும் கடயம் கிரா மத்தை எடுத்துக்கொள்வோம். இவ்வூரைச் சூழ்ந்திருக் கும் வயல்களெல்லாம் சுமார் 30 பெரிய மிராசுதார்களுக் கும், பல சில்லரை நிலச்சுவான்களுக்கும் உரியன.

இந்த நிலச்சுவான்கள் எல்லோரும் சேர்ந்த ஒரு சபை சமைக்கப்படவேண்டும். இந்த சபையார் கோயில்

வாசலிலே கூட்டம் கூடியிருந்துகொண்டு ஊர் ஜனங்கள் அத்தனை பேரையும் பறைசாற்றுவித்துத் தம் முன்னே வரவழைக்க வேண்டும். அப்போது நிலச்சுவான்கள் எல்லோருடைய சம்மதப்படி அவர்களின் பிரதிநிதியாக ஒருவர் எழுந்து நின்று கிராமத்தாரிடம் பின்வருமாறு பிரமாணம் செய்து கொடுக்கவேண்டும்.

எப்படி என்றால்:—

"கஞ்சியாவது கிடைத்து வருகிறதென்றும் அது நியதமாக எப்போதும் கிடைத்துவருமென்ற நிச்சயம் இல்லாதபடியால் நீங்கள் எண்ணில்லாத மனக் கவலை களுக்கும், மனஸ்தாபங்களுக்கும், பொறாமைகளுக்கும், வஞ்சனைகளுக்கும், ஏமாற்றங்களுக்கும், கலகங்களுக்கும் இரையாகி மடிகிறீர்கள். "அன்ன விசாரம், அதுவே விசாரம்" என்று பட்டினத்துப் பிள்ளை சொல்லியது போல், உங்களுக்கு இந்த ஆகார விசாரம் தீராத பெரும் விசாரமாக வந்து மூண்டிருக்கிறது. நியாயமான உழைப் பாலோ, அல்லது ப்ருதோம் என்ற பிரான்ஸ் தேசத்து சாஸ்திரி, 'உடைமையாவது களவு' என்று சொல்லியபடி வஞ்சனைத் தொழில்களாலோ, இந்த ஊரிலுள்ள வயல்கள் தோட்டங்கள் எல்லாவற்றையும் எங்கள் சிலருக்கு மாத்தி ரம் உரிமையாகும்படி ஏற்பாடு செய்துவிட்டார்கள். பூஸ் ஸ்திதி எங்களிடம் இருப்பது எங்களுடைய குற்றமாகமாட் டாது. எனினும், உங்களுடைய ஒத்துழைப்பும், ஆதரவும், ஸ்நேகமும் இல்லாவிட்டால் எங்களுக்கு இந்த நிலங்கள் எவ்விதமான பயனும் தரமாட்டா. மேலும் நீங்கள் அத் தனைபேரும் ஆகார விஷயத்தில் ஒருவித நிச்சயமில் லாமையால் படும் கஷ்டங்களும் அதினின்றும் உங்களுக் குள் ஏற்படும் போராட்டங்களும் எங்களையும் சூழ்ந்து தீராத துன்பத்திற்கு உள்ளாக்குகின்றன. நாங்கள் பொருளுடைமை விஷயத்தில் மாத்திரம் உங்களினின்றும் வேறுபட்டிருப்பினும், மற்றெல்லா அம்சங்களிலும் உங்க ளைப்போன்ற மனிதர்களே; ஆதலாலும், உங்களுடனே

எப்போதும் ஊடாடிப் பழகுவதும் விவஹரிப்பதும் எங்களுக்கு மிகவும் இன்றியமையாததாலும், நீங்கள் தீராத் வறுமை நரகத்தில் துன்பப்பட்டுக் கொண்டிருக்கையில் நாங்கள் மாத்திரம் சந்தோஷமாக இருத்தல் சாத்தியப்படவில்லை. எங்களுடைய காரியங்கள் எல்லாம் உங்களாலே ஆகவேண்டி இருக்கிறது. எங்களுக்கு உங்களைத் தவிர வேறு கதியில்லை. உங்களுடைய வறுமைத் தீ எங்களை நாலுவிதங்களிலும் சாபம்போல் எரிக்கிறது. எங்களுக்குள் சிறிதேனும் ஒற்றுமை இல்லாமல் செய்துவருகிறது. எங்களுக்குள் மேன்மேலும் பொருமையை வளர்க்கிறது.

பூமி எல்லோருக்கும் பொதுவான தாய் போலாகும். அதில் நாங்கள்மாத்திரம் உரிமை கொண்டாடுதல் அநியாயம் என்று எங்களுக்கு அர்த்தமாகின்றது. அதினின்றும், பூர்வீகக்காலம் முதல் பரம்பரை பரம்பரையாக வழங்கி வரும் சொத்தை ருஷ்யா முதலிய தேசங்களில் நடப்பது போல், நீங்களும் பலாத்காரமாக எங்களைக் கொன்றும், சிறையிலிட்டும் எங்களிடமிருந்து பறித்துக்கொள்வது நியாயமில்லை. ஏனென்ருல், உடைமை பொது நாகரிகத்திற்கு ஹேதுவாகும். எந்தக் காரணம் பற்றியும் கொள்ளையிடுவது சரியில்லை. நிலமில்லாத நீங்கள் எங்களுடைய நிலத்தைக் கொள்ளையிட்டுப் பறித்துக் கொள்ளலாமெனில், துணி இல்லாதவர்கள் உங்களுடைய துணிகளைப் பறித்துக்கொள்ளலாமன்ருே? வீடில்லாதவர்கள், பிறர் வீடுகளைக் கைப்பற்றிக் கொள்ளலாம். ஒரு சிறிதேனும் உடைமையில்லாதவர்கள் மலைக் குறவரிடையே கூடக் காணப்படுவதில்லை. பூஸ்திதிமாத்திரம்தாஞ உடைமை? துணி, மணி, வீடு, பாத்திரம், பண்டம், பாய், தலையணி எல்லாம் உடைமைகளே. மலைப் பழிஞர் நாட்டுக்குள் பிரவேசித்து உங்களுடைய வீடு, பாத்திரங்கள் எல்லாம் அபகரித்துக் கொள்ளுதல் நியாயமென்று உங்களுக்குத் தோன்றுகிறதா?

"எனவே, எங்களுடைய பூஸ்ஸ்திதிகளை நீங்கள் பலாத்காரமாகப் பறித்துக்கொள்ளுதல் நியாயமன்று. ஆனாலும், பூமித்தாய் எல்லோருக்கும் பொதுவாகத் தரும் விளைபொருள்களை நாங்கள் சிலபேர் மாத்திரம் பங்கிட்டெடுத்துக்கொண்டு, உங்களுக்கு எங்களுடைய தயவு இருந்தால்தான் ஆகாரம், எங்கள் தயவில்லாவிட்டால் பட்டினி என்ற நிலையில் உங்களை வைத்து அதினின்று உங்களை அடிமைகளாக்கி நடத்திவரும் மகா பாவத்திற்கு இன்னும் ஆளாயிருக்க எங்களுக்குச் சம்மதமில்லை. "இன்றும் வருவது கொல்லோ நெருநலுங் கொன்றது போலும் நிரப்பு" என்று திருவள்ளுவர் சொல்லியது போல, (அதாவது 'நேற்று முழுதும் நம்மைக் கொலை செய்வதுபோலவே வருத்திக்கொண்டிருந்த வறுமை இன்றைக்கு வந்துவிடுமோ' என்று) பரிதபித்து ஏங்கும் நிலைமையில் நீங்கள் உயிர் வாழ்க்கை நடத்திவருகிறீர்கள். உங்களை இந்த உணவு நிச்சயமில்லாத நிலையில் வைத்திருக்கும் பாவத்தை இனிச் சுமந்துகொண்டிருப்பதில் எங்களுக்குச் சம்மதமில்லை. எனவே, உங்களில் ஆண், பெண், குழந்தை எவருக்கும் என்றைக்கும் ஆகார விஷயமாக பயமில்லாதபடி செய்துவிட வேண்டும் என்று நாங்கள் தீர்மானித்திருக்கிறோம். அதற்கு, பின்வரும் வழியை அனுசரிக்க வேண்டுமென்று நிச்சயத்திருக்கிறோம்.

அதாவது எங்களில் சிலரும் உங்களில் சிலரும் கூடி "தொழில் நிர்வாக சங்கம்" என்றொரு சங்கம் அமைக்கப்படும். பயிர்த்தொழில், கிராம சுத்தி, கல்வி, கோயில் (மதப் பயிற்சி), உணவு, துணிகள், பாத்திரங்கள், இரும்பு, செம்பு, பொன் முதலியன சம்பந்தமாகிய நானாவகைப்பட்ட கைத்தொழில்கள்-இவை இந்தக் கிராமத்திற்கு மொத்தம் இவ்வளவு நடைபெறவேண்டுமென்றும், அத்தொழில்களில் இன்னின்ன தொழிலிற்கு இன்னார் தகுதியுடையவரென்றும் மேற்படி தொழில் நிர்வாக சங்கத்தார்

தீர்மானம் செய்வார்கள். அந்தப்படி கிராமத்திலுள்ள நாம் அத்தனை பேரும் தொழில் செய்யவேண்டும். அந்தத் தொழில்களுக்குத் தக்கபடியாக, ஆண் பெண் குழந்தை முதலியோர் இளைஞர் அத்தனை பேரிலும் ஒருவர் தவறாமல் எல்லாருக்கும் வயிறு நிறைய நல்ல ஆகாரம் கொடுத்து விடுகிறோம். நாங்கள் பிள்ளை பிள்ளை தலைமுறையாக இந்த ஒப்பந்தம் தவற மாட்டோம். இந்தப்படிக்கு இந்த ஆலயத்தில் தெய்வ சந்நிதியில் எங்கள் குழந்தைகளின் மேல் ஆணையிட்டுப் பிரதிக்ஞை செய்து கொடுக்கிறோம். இங்ஙனம் நமக்குள் ஒப்பந்தம் ஏற்பட்ட விஷயத்தை எங்களில் முக்கியஸ்தர் கையெழுத்திட்டு செப்புப்பட்டயம் எழுதி இந்தக் கோயிலில் அடித்து வைக்கிறோம்.''

இங்ஙனம் பிரதிக்ஞை செய்து, இதில் கண்ட கொள்கைகளின்படி கிராம வாழ்க்கை நடத்தப்படுமாயின், கிராமத்தில் வறுமையாவது, அதைக் காட்டிலும் கொடுமையாகிய வறுமை யச்சமாவது தோன்ற இடமில்லாமல் ஒற்றுமையும், பரஸ்பர நட்பும் ஏற்பட்டு, அற்பாயுள் நோய் முதலிய பிசாசுகளின் பயந்தொலைந்து, பரிபூரண க்ஷேமம் உண்டாகும். ஒரு கிராமத்தில் அந்த ஏற்பாடு நடந்து வெற்றிகாணுமிடத்து, பின்னர் அதனை உலகத்தாரெல்லாரும் கைக்கொண்டு நன்மை யடைவார்கள்.

தமிழ் நாட்டு மக்களே, இங்ஙனம் உலகத்தில் வறுமையைத் தீர்க்கும் பெருந் தர்மத்தில் வழி காட்டுவோராக நிற்கும் மஹிமை உங்களைச் சார்வதாகுக!

ARCHIVES LIBRARY No.

எமது காந்தீய-சர்வோதய இலக்கியம்

மகாத்மா காந்தி எழுதியவை

		ரூ.	அ.
சர்வோதயம் : [ரஸ்கினின் "Unto This Last"-இன் சாரம்	...	0	4
ஆசிரம வாழ்க்கை	...	1	4
ராம நாமம்	...	0	12
நீதி தர்மம்	...	0	4
சமூகத்தில் ஸ்திரீகளின் ஸ்தானம்	...	0	4
சர்க்காவும் அஹிம்சா சமுதாயமும்	...	1	0
ராட்டை—தத்துவ விளக்கம்	...	1	4
ஆசிரம பஜனாவளி	...	0	8
காந்திஜியின் சுயசரிதம்—சுருக்கம்	...	2	0
கீதாபோதனை	...	0	12

காந்திஜி—கஸ்தூரிபா பற்றியவை

எமது பா : வனமாலா பரீக்	...	1	4
எமது பா : சுசீலா நய்யர்	...	1	4
காந்திக் காட்சிகள் : காகா காலேல்கர்	...	1	4
பாபூ—என் தாய் : மனு காந்தி	...	0	12
பாப்பாவின் காந்தி : ஜுகத்ராம் தவே	...	0	12

தத்துவ நூல்கள்

கீதைப் பேருரைகள் : வினோபா			
சாதா பைண்டு	...	1	0
காலிகோ பைண்டு	...	2	8
வினோபாவின் குரல்	...	0	8
காந்தியும் மார்க்ஸும் : மஷ்ரூவாலா—வினோபாஜியின் முன்னுரையுடன்	...	1	4
காந்தீய நவநீதம் : கிசோரிலால் மஷ்ரூவாலா	...	1	8

YZ W M43
N56

	ரூ.	அ.
காந்தீயப் பொருளாதாரம் :		
ஜே. சி. குமரப்பா	1	4
ஐரோப்பாவின் படிப்பினைகள் :		
ஜே. சி. குமரப்பா	0	6
சர்வோதயமும் உலக அமைதியும்		
ஜே. சி. குமரப்பா	0	2
சுயம்பூர்ண கிராமம்	0	5
புக்கர் வாஷிங்டன் : வ. வே. சு. ஐயர்	0	8
தன்னம்பிக்கை : எமர்சன் :		
வ. வே. சு. ஐயர் மொழிபெயர்ப்பு	0	12
மலஜல சுத்தி : வல்லபஸ்வாமி	0	8
துப்புரவு விஞ்ஞானம் : தீரேந்திர மஜூம்தார்	0	8

கதர் சாஸ்திரம்

	ரூ.	அ.
நூற்புக் கணிதம் : கிருஷ்ணதாஸ் காந்தி		
முதல் பாகம்	0	6
இரண்டாம் பாகம்	0	8
மூன்றும் பாகம்	0	14
நான்காம் பாகம்	1	0
நூற்புக்கலையின் நுணுக்கங்கள்	1	4
தக்ளியால் நூற்பதெப்படி?	0	10
கைராட்டை—அதன் சரித்திரமும் புத்துயிரும்	1	8
கிஸான்-பெட்டி- ஈரிழை ராட்டை	1	0
பட்டை போட சுலப வழி	0	4
நரம்பு செய்தல்	0	8
பருத்திப் பிரச்னை	0	6
கதர் நெசவு	0	8

ARCHIVES LIBRARY
MADRAS
108857

இதர விபரங்களுக்கு :

சர்வோதயப் பிரசுராலயம்

24, சீனிவாசபுரம், தஞ்சாவூர்

"पूर्ण ग्रामदान"—विनोबा

प्रथम संस्करण—१०,०००] [दाम ४ अ

எமது பூதானப் பிரசுரங்கள்

★

பூதான உதயம்	—விநோபா
சர்வோதயப் பிரகடனம்	,,
வணிகரே! வாரீர்!	,,
கிராமங்களுக்கு ஆரோக்கிய திட்டம்	,,
கிராமந்தோறும் சுயராஜ்யம்	,,
பூதான ஐய விளக்கம்	,,
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு	,,
சர்வோதய ஆதாரங்கள்	,,
ஜீவன் தானம்	—ஜயப்பிரகாச்ஜி
பூதானப் புரட்சிக்கு அரைகூவல்	,,
சம்பத்துதான யக்ஞம்	—ஜாஜூஜி
பூதானத்தின் புரட்சித் தன்மை	—தர்மாதிகாரி
மனிதப் புரட்சி	,,
பூதானமும் கிராம ராஜ்யமும்	—சங்கரராவ் தேவ்
பூதான ஜோதி	—விமலாதக்கர்
ஒரு மாபெரும் அநீதி	—டால்ஸ்டாய்
பூதானப் பாடல்கள்	—ராமலிங்கம் பிள்ளை
விநோபா வாழ்க்கை	
விநோபாவின் குரல்	—நெ. சிவசுப்பிரமணி
பூதான வெள்ளம்	—ம. சௌத்ரி
முதல் கிராமதானம்: மங்கரோட்	
தமிழ் நாட்டில் விநோபாஜியின் பிரவேசம்	
சென்னை நகரில் விநோபாஜி	
சமூகப் பாதயாத்திரை	—பங்க்
உழைப்பு தானம்	—சிவாஜி பாவே

கிடைக்குமிடங்கள் :—

கதர் வஸ்திராலயங்கள், பூதான ஊழியர்,
ஹிக்கின்பாதம், சுதேசமித்திரன் ஸ்டால்கள்,
சர்வோதயப் பிரசுராலயம், தஞ்சாவூர்.